Registered in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 1 ஆம் நாள் துல்ஹஜ் 9 (14-5-62) திங்கட்கிழமை இதழ் 92




# 600 விவசாயிகள் குடியேற்றம்

## அக்கராயன், வவனிக்குள திட்டத்தில் காணிபங்கீடு

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாத இறுதியில் வவனிக் குளம், அக்கராயன் குளம் ஆகிய இரண்டு குடியேற்றத்திட்டங்களிலும் சுமார் 600 விவசாயிகள் குடியேற்றப்பட விருக்கிருர்கள். இதற்கான இறுதி ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய் யப்பட்டிருப்பதாகக் காணிக் கச்சேரியின்போது தெரிவுசெய்யப் பட்ட இவர்களுக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் அறிவித்துள் ளார்.

கடந்த இரண்டு வருடங்க ளுக்கு முன் இக் குடியேற்றத் திட்டங்களுக்கான காணிக் கச்சேரி நடத்தப்பட்டு குடி யேற்றவாசிகள் தெரிவுசெய்யப் பட்டிருந்தனர். ஆனல் அங்கு வாடிகள் கட்டுவதிலும் கிணறு கள் வெட்டுவதிலும் ஏற்பட்ட தாமதம் காரணமாக 1961-ம் ஆண்டு சித்திரை மாதம் குடி யேற்றப்படுவதாக அறிவிக் கப்பட்டிருந்தும் இந் நாட்டில் ஏற்பட்ட அவசரகாலச் சட்ட அரசியல் சூழ்நிலைகள் காரண மாக இவை காலவரையறை யின்றி ஒத்திவைக்கப்பட்டிருந் தது.

வவனிக்குளம் குடியேற்றத் திட்டத்தில் சுமார் 350 குடி யேற்ற வாசிகள் இம்மாதம் 21-ம் திகதியும் அக்கராயன் குடியேற்றத்திட்டத்தில் குடி யேறுபவர்கள் இம்மாதம் 23-ம் திகதியும் அங்கு அழைத்துச் செல்லப்பட்டு அடுத்த தினம் காணிகள் பங்கிட்டுக் கொடுக் கப்படவிருக்கிறது.

வாலிபர்கள் சிலர் உத்தி யோக காரணமாகச் சென்று விட்டதனல் இக் குடியேற்றத் திட்டங்களில் படித்த வாலிபர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டி ருந்த காணிகள் சில விவசா யிகளுக்கே கொடுக்கப்பட்டிருக் கின்றது.

இவர்களுக்கும் தலா 2 ஏக்கர் மேட்டுநிலமும் 3 ஏக்கர் பள்ளக் காணியும் வழங்கப்ப டும்.

## தமிழரசுக் கட்சி கிளைக் கூட்டம்

### இராஜதுரை வீட்டில் 20-ம் திகதி நடைபெறும்

மட்டக்களப்பு, ஞாயிறு

தமிழரசுக்கட்சியின் மட்டக்க ளப்பு கிளைக்கூட்டம் இம் மாதம் 20-ம் திகதி மட்டக் களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை வீட்டில் நடை பெறவிருக்கிறது.

மட்டக்களப்பு கிளை எவ் வாறு செயலாற்ற வேண்டும் என்பது பற்றியும் மட்டக்க ளப்பு கிளையின்செயல்த் திட்டம் பற்றியும் இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக் கும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட விருக்கிறது.

இக் கூட்டத்திற்கான ஏற் பாடுகளை, மட்டுநகர்க்கிளைக் காரியதரிசி திரு. சி. சிவசுப் பிரமணியம் செய்து வருகி ருர்.

## அல்ஜீரிய உள்ளூராட்சி காரியதரிசி கொலை

அல்ஜியர்ஸ், மே 13

கிழக்கு அல்ஜீரியாவில் உள் ளூராட்சி சபையின் உதவிக் காரியதரிசி நேற்று பல தட வைகள் துப்பாக்கியால் சுடப் பட்டு கொல்லப்பட்டார்.

அல்ஜியர்சில் சில வைத்திய சாலையில் ஐந்து பிளாஸ்டிக் குண்டுகள் வெடித்ததில் சட் டிடம் பலத்த சேதத்துக்குள் ளானது.

சென்ற ஒரு வார காலத் துக்குள் அல்ஜீரியாவில் ஐரோ ப்பிய இரகசிய ராணுவஸ்தாப னத்தைச் சேர்ந்தவர்களென ஆயிரத்துக்கும் அதிகமானேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

## "நாயரின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பு"

—வட்டுக்கோட்டை எம். பி.

வட்டுக்கோட்டை, ஞாயிறு

"தன்னலமற்ற தொண்டா ற்றிவந்த திரு. நாயரின் திடீர் மறைவு தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கே பேரிழப்பாகும்" என்று வட்டுக் கோட்டை எம். பி.யும் தமிழர சுக் கட்சித் தலைவர்களில் ஒரு வருமான திரு. அ. அமிர்தலிங் கம் தெரிவித்தார்.

"இலங்கையில் பிரஜாவுரி மைச் சட்டத்தை எதிர்த்துப் பிரிவுக்கவுன்சில்வரை வாதாடி வெற்றி பெற்று இந்திய வம் சாவழியினருக்கு வழிகாட்டிய வர் திரு. நாயர்" என்று திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

தொழிலாளர்களின் நலனுக் காகவும் தமிழ்ப் பேசும் மக்க ளின் நலனுக்காகவும் அயராது உழைத்துவந்த ஒரு பெரியார் திரு. நாயர். அவரது மறைவு ஈடு செய்யமுடியாத பெரு நஷ் டம்" என்று திரு. அமிர்தலிங் கம் கூறினர்.

## நாயரின் ஈமச்சடங்கில் தொழிலாளர் திரண்டனர்

எட்டியாந்தோட்டை, ஞாயிறு

சென்ற சனிக்கிழமை காலை இங்கு திடீரென மரணமான இலங்கை ஜனநாயக தொழி லாளர் காங்கிரசின் பொதுக் காரியதரிசியும் பிரபல தொழி லாளர் தலைவருமாகிய திரு. கே. ஜி. எஸ். நாயரின் அந்தி மக் கிரியைகள் இன்று மாலை இங்கு நடைபெற்றன.

பழைய காங்கிரஸ் தலைவர் களில் முக்கியமானவரும் சென்ற இருபது வருடங்களு க்கு மேலாகத் தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்கு அயராது உழைத்தவருமான திரு நாயருக்குத் தங்கள் இறுதி அஞ்சலியையும் மரியா தையையும் தெரிவிக்கு முக மாக மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந் தொகையான தொழிலாளர் கள் எட்டியாந்தோட்டைக்குத் திரண்டுவந்து இறுதிச் சடங்கு களில் கலந்துகொண்டனர்.

பல்வேறு அரசியல் கட்சிக ளைச் சேர்ந்தவர்களும் தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் திரு. நாயருக்கு தங்களின் இறுதி மரியாதையைத் தெரி வித்துக்கொண்டனர்.

திரு. நாயரின் மரணச் செய்தி கிடைத்ததும் எட்டி யாந்தோட்டைக்கு விரைந்து சென்ற ஜனநாயகத் தொழிலா ளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் சகல அலுவல்களை யும் கவனித்துக் கொண்டிருந் தார்.

## சந்திரனுக்கு நாய் செல்லும்

மாஸ்கோ, மே 13

சந்திரமண்டலத்துக்கு முதலில் ஒரு நாய் அனுப் பப்படுமென்றும் அதன் பின்னரே மனிதனை அனு ப்புவதுபற்றி ஆராயப்படு மென்றும் சோவியத் விஞ் ஞானி ஒருவர் அறிவித் துள்ளார்.

## லிபரல், தொழில் கட்சி அதிக ஸ்தானங்கள்

இங்கிலாந்து, மே 13

இங்கிலாந்திலும் வேல்ஸி லும் தற்பொழுது நடைபெற் றுக் கொண்டிருக்கின்ற பட் டின சபைத் தேர்தல்களில் லிபரல் கட்சியும், தொழிற் கட்சியும் கூடுதலான ஸ்தா னங்களைக் கைப்பற்றியுள்ள தாக அறிவிக்கப்பட்டிருக்கி றது. லிபரல் கட்சி 110 அதிக மான ஸ்தானங்களைக் கைப் பற்றியிருக்கிறது.

## 'கடந்தகால பிழைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்வோம்'

### புதிய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் உரை

புதுடில்லி, மே 13

"இந்திய மக்கள் கடந்த காலப்பிழைகளையும், குற்றங் களையும் மறந்துவிட்டு எல்லோ ரும் ஒன்று சேர்ந்து நாட்டைச் செழிப்புறச் செய்ய வேண்டும்." இந்தியாவின் ராஷ்டிரபதியாக இன்று பதவியேற்ற டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தனது உரையில் மேற்கண்ட வாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகை யில் இந்தியாவின் ஜனநாயகக் கொள்கைக்கு ஒழுங்கு மட்டு மின்றி ஆத்மீகமும் அத்தியா வசியம் என்பதைச் சுட்டிக் காட்டினர். "சமத்துவம் இன் றேல் சுதந்திரத்திற்கு அர்த்த மில்லை. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல் லோரும் சமமாக வழவேண் டும், ஒத்துழைக்க வேண்டும். என்று ராஷ்டிரபதி தெரிவித் தார். தம்மை இந்த உயர் பதவிக்குத் தெரிவு செய்ததற் காக மக்களுக்கு நன்றி தெரி வித்துக்கொண்டதுடன் தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக வும் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

இன்று காலை பார்லிமெண் டின் மத்திய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு வைபத்தில் பிரதம நீதியரசர் புதிய ஜனதி பதிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அத்தரு ணத்தில் டாக்டர் ராதாகிருஷ் ணன் பதவியேற்றதற்கு மரி யாதை தெரிவிக்கும் முகமாக 31 குண்டுகள் தீர்க்கப்பட்டன.

டாக்டர் ராதாகிருஷ்ணனும் ராஜேந்திரபிரசாதும் ராஜ் பவனியிலிருந்து 6 குதிரைகள் பூட்டிய சாரட்டில் பவனியாக பார்லிமெண்ட் கட்டடத்துக்கு வந்து சேர்ந்தனர். வழி நெடு கிலும் பெருந்திரளான மக்கள் திரண்டு நின்று தங்கள் மகிழ்ச் சியைத் தெரிவித்துக்கொண்ட னர்.

புதிய ஜனதிபதியாகப் பதவி யேற்ற டாக்டர் ராதாகிருஷ் ணன் பதவியிலிருந்து விலகிய

(8-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## இ. தொ. கா. கிளை நிறுவ ஏற்பாடு

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ கட்சி ஒன்றை நிறுவுவதற்கான நட வடிக்கைகளை இ பகுதியி லுள்ள இ. தொ. கா. பிரமுகர் கள் மேற்கொண்டுள்ளனர்.

சுமார் இரண்டாயிரம் ஆதர வாளர்களோடு மட்டக்களப் பில் இ. தொ. கா. கிளையை நிறுவவும், மிக விரைவில் கிளை அலுவலகமொன்றை திறக்க வும் துரித ஏற்பாடுகள் செய் யப்பட்டு வருகின்றன.

## வரி விளம்பரம்

வெளிவருகிறது! வெளிவருகிறது!!

### தமிழ் முரசு

(இலக்கியத் திங்கள் இதழ்)

சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியன வேண்டப்படுகின்றன. இளம் எழுத்தாளர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட சிறுகதைப் போட்டி முடிவு தேதியை பலரது வேண்டுகோளின் படி 10-6-62க்கு மாற்றியிருக்கிறோம். இதனால் ஜூன் 1-ந் திகதியில் நடைபெறவிருக்கும் வெளியீட்டு விழாவில் போட்டி முடிவுகளை அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். போட்டி விபரங்களை ஆசிரியரிடம் அறிந்து போட்டியில் கலந்துகொள்ளவும்.

ஆசிரியர்,
"தமிழ் முரசு"
மானிப்பாய்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்
கைலாயபிள்ளையார்கோவிலடி.
யாழ்ப்பாணம்.

### ஏல விற்பனை

ஒரு பெரிய மலைவேம்பு மரம் 26-5-62 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

Dr. H. R. சரவணமுத்து
காரியதரிசி.

அருள்யோவான்
தேவாலயம்,
யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாயில், தென்னை, பனை, மா-மரங்களும், கிணறுமுள்ள குடியிருக்க-தகுதியான பத்து பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. பகிர்ந்து நாலு அல்லது ஆறு பரப்பும் வாங்கலாம். மனுச்செய்க.

சி. க. நடராசா,
காணி சொந்தக்காரர்.
271, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## உடுவில் கொலைவழக்கு

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

தெல்லிப்பழை. ஞாயிறு உடுவிலைச் சேர்ந்த நாகமுத்துமாணிக்கம் என்பவரைத் திட்டுத்தடியால் தாக்கிக் கொலை செய்ததாக அதேகிராமத்தை சேர்ந்த பொன்னன் இராசையா என்பவர் மீது சுன்னாகம் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் டி. சேக்ஷ்பியர், காங்கேசன்துறை டி. எம். ஒ. டாக்டர் வேதாரண்யம் ஆகியோர் சாட்சியமளித்தபின் நீதிபதி எதிரியை சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு உத்தர விட்டார். சுன்னாகம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. எக்கநாயக்காவின் உதவியுடன் திருவாளர்கள் எஸ். நடராசா, ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோர் வழக்கை நடத்தினர். திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை எதிரி தரப்பில் ஆஜரானர்

ஆசிரியர் கடிதம்

## "தரம் குறைந்த கலைஞர்கள் வருவதைதடை செய்யவேண்டும்"

இந்தியாவிற்கும் இலங்கைக்கு மிடையே சகல விதமான தொடர்புகளையும் கொண்டுள்ள சமூகம் இசைக் கலைஞர்கள் சமூகமாகும். அதிலும் குறிப்பாக நாதசுரதவில் கலைஞர்கள் சமூகமே இத் தொடர்புகளை அன்றும் இன்றும் கொண்டுள்ளது. இந்தியாவிலிருந்து சிறந்த வித்துவான்கள் இங்குவந்த போவதனை நாமனைவரும் நன்கு வரவேற்கின்றோம். நமது பொருளாதார வளத்திற்கு முட்டுக் கட்டை போட வருபவர்களையே நாம் தடை செய்யக் கோருகின்றோம். 35, 40 ஆண்டுகளுக்கு முன் நம்நாட்டில் கலை வளர்ந்தது. பொருளாதாரக் கஷ்டமின்றி நமது சமூகம் வாழ்ந்தது. அப்போது ஒரு மேள கோஷ்டியில் நான்கு பேரே இருந்தனர். எத்தனை கோஷ்டிகள் வந்தாலும் ஒருதர் வாசித்த இராகத்தையே மற்றவர்களும் வாசிக்க வேண்டும். என்ற நியதியும் இருந்து வந்தது. கோவில் உற்சவத்தில் மூன்று நாதஸ்வர வித்துவான்கள் வந்தாலும் ஒரு ராகத்தையே பல்லவி, நிரவல், ராகமாலிகையாகச் செய்வர். இதனல் இளம் கலைஞர்களுக்கு கலையில் ஈடுபட வாய்ப்பு இருந்தது. அந்த நாளிலே தான் நமது நாட்டுப்பாணியை மாற்றி மிக உயர்ந்த தரமான சோழ நாட்டுப்பாணியை நமக்குத் தந்தார்கள். அந்தப் பெருமை நாதசுர, தவில் மேதைகளான திருச்சேரை முத்துக் கிருஷ்ணப் பிள்ளை, நாவூர் ராஜூப் பிள்ளை. வேதாரணியம், பொதுச் சாமிபிள்ளை, திருவீழிமிழலை தெய்வ சிகாமணிப் பிள்ளை போன்றோருக்கே உரியது. அவர்களை நம் கலைக்குரு பீடமாக வைத்து இன்றும் போற்றுகின்றோம். பின்பு நம் நாட்டில் இரண்டு நாதசுர, இரண்டுதவில் வீதம் ஒருகோஷ்டியில் ஆறு பேர் இருக்கின்றனர். இந்த முறை இன்னும் நடை முறையிலிருந்து வருகிறது. இந்தியாவிலிருந்து அதிகமானோர் நமது நாட்டுக்கு வந்து பல மாதங்கள் தங்கிப் போனர்கள். இதனல் இங்குள்ளவர்களுக்குப் பொருளாதாரக் கஷ்டம் ஏற்பட்டது. இக்கஷ்டம் படிப்படியாக உயர்ந்து இன்று உச்சநிலைமை அடைந்துள்ளது. கலை வளர்ச்சியும் கீழ் நிலை அடைகின்றது என்று கூறின் அது பொய்யாகாது. பாணியும் வேறு நடையாக மாறுகின்றது. ஓர் உயர்தர நாதசுர, தவில் கலைஞர்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமானல் ஆரம்ப அடிப்படை பெரும் பகுதிப் பாடத்திட்டத்தில் அமையவேண்டும். பாடத்திட்டத்தைச் சரியாக அமைத்துக் கொள்ள நமது நாட்டில் ஆசிரியர்களே இல்லை எனலாம் எனவே இந்தியாவிலிருந்து சிறந்த ஆசிரியர்களை அழைப்பித்தல் தக்கது. தற்போது நமது நாட்டில் பல இளம் வித்துவான்கள் நாதசுரம், கலைகளில் திறமையுடன் விளங்குகிருர்கள். நன்ருகவே இருக்கின்றது. ஆனல் அவர்களுக்கு அவர்களுடைய பெற்ருேர்கள் இளமையில் அடிப்படைப் பாடத் திட்டத்தில் கவனஞ் செலுத்தியிருப்பார்களேயாகில் இன்று அந்தக் கலைஞர்களுடைய நிலை வேறு. பெற்ருேர்களுடைய பொருளாதாரக் கஷ்டமே இதற்குக் காரணம் என்பதனை எவரும் மறுக்க மாட்டார்கள். ஆனலும் இளைஞர்கள் தங்களுடைய முயற்சியினலும் புத்தியினலும் தமது நிலையை உயர்த்தியிருப்பது பாராட்டுதற்குரியதே.

தவில் வித்துவான் இலயஞான குபோபூபதி திரு. வி. தெட்சணமூர்த்திக்கு கடவுள் கொடுத்த கொடையே கலைச் செல்வமாகும். ஆனல் அவருடைய தகப்பனருக்கு பொருளாதாரக் கஷ்டமிருந்தும் கூட, தனது மகனுக்கு அடிப்படைப் பாடத் திட்டத்தை உண்மையாகச் செய்துவைத்தார். இது நம்போன்ருேர் நேரில் கண்ட உண்மை. தற்போது ஒரு உற்சவத்திற்கு நாலு, ஐந்து மேளக் கோஷ்டிகளாகச் செல்லுகின்ரேம். பகல் விழாவில் தலா ஒவ்வொரு கோஷ்டியும் அரைமணிநேரக் கச்சேரி செய்கின்றன. இரண்டு கீர்த்தனையும் நிரவலும் நாலு சினிமாப்பாட்டு வீதமும் கச்சேரி செய்கின்றனர். கலை வளர்ச்சியை இங்கே நாம் காண்பது எவ்வாறு? கலை வளர வேண்டுமென்று கோஷமிடுவது பொய்ப்பிரசாரமே தவிர வேருென்றுமில்லை.

1961-ம் ஆண்டு நமது நாட்டின் சூழ்நிலை காரணமாக உற்சவங்கள் பல தடைபட்டு நின்றன. ஆடி, ஆவணி மாசங்களில் விழாக்கள் நடைபெற்றன. தடைப்பட்ட ஆலய விழாக்களும் இக்காலத்தில் சில நிகழ்ந்தன. அனைத்தையும் இங்குள்ள நாமே பூர்த்தி செய்து கொண்டோம். அப்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் மூன்று பேரேயாகும். இப்போது மிக நெருக்கடியாக உற்சவம் நடைபெறும் காலம்.

(5ம்- பக்கம் பார்க்க)

## இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ. தெல்லியூர்-

சுபகிருதுஆண்டு வைகாசித் திங்கள் 1ம் நாள் திங்கட் கிழமை(14-5-62)ஹிஜரி ஆண்டு 1381,துல்ஹஜ்ஜு மாதம் 9ம்பிறை.

பகல் 1-33வரை தசமி.அதன் பின் ஏகாதசி. காலை 7-14வரை பூரம். அதன்பின்னர் உத்தரம். சித்தயோகம். விஷ்ணுபதி புண்ணிய காலம்.(10-55முதல் 5-23 வரை) இராகுகாலம் 7-23முதல் 8-53வரை.

உத்தரம், அத்தம்,சித்திரை, சுவாதி, விசாகம்ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இவர்கள் சுப கருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

பூரம்-உத்தரம்: பணவரவு, தோன்றல், குடும்பநலம் சுப கருமம்.

மேடம்: உழைப்பு வெற்றி, பணவரவு, போஷனசுகம்,தேக நலம்.

இடபம்: தேகாரோக்கியம், தொழில்ஊக்கம், பகைநீக்கம், உற்சாகம்.

மிதுனம்: குடும்ப சச்சரவு, அவசர நடத்தை, வீண்பழி, அகாலஉணவு.

கடகம்: குடும்ப ஒற்றுமை, தொழிற்சிறப்பு, ஊழியர்உதவி, பணவரவு.

சிங்கம்: தெய்வ வழிபாடு, பணவரவு, கொள்ளல் விற்றல் லாபம், மதிப்பு.

கன்னி: சுபகரும தடை, முயற்சிக்கேற்ற லாபம், நல்லோர் மதிப்பு, புகழ்.

துலாம்: தெய்வ வழிபாடு, குடும்பசுகம், பணவரவு, ஊழியர் உதவி.

விருச்சிகம்: பிரயாணம், தொழில் விருத்தி, தார்மீக செலவு, தெய்வவழிபாடு,

தனு: பிதுருவழிஉதவி, செய்காரிய அனுகூலம், குடும்ப சுகம், மதிப்பு.

மகரம்: ஆடம்பரச் செலவு, செய்காரிய வெற்றி, மதிப்புயர்ச்சி, கடன்வரவு.

கும்பம்: இனபந்துக்கள் சந்திப்பு, சுபகருமமுயற்சி,தொழிற்சித்தி, பணவரவு.

மீனம்: ஆசையால் நட்டம், ஏமாற்றம், செலவதிகம், கடன் பயம்.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், தாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் இடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/115

# லாவோசில் முற்றுகை நிலை பிரகடனம்

## மேற்கு வங்க கிழக்கு பாகிஸ்தான் சம்பவங்கள்

### பிரதமர் நேரு அறிக்கை

புதுடில்லி, மே 12

மேற்கு வங்காளம், கிழக்குப் பாகிஸ்தான் ஆகிய இடங்களில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி பிரதமர் நேரு நேற்றுராஜ்யசபாவில்ஒரு அறிக்கை விடுத்தார்.

மேற்கு வங்காளத்தில் மால்டா என்ற இடத்தில் நடைபெற்ற சம்பவங்களை பாகிஸ்தான் பத்திரிகைகள் மிகைப் படுத்திச் செய்திகள் வெளியிட்டிருந்தனவென்று பிரதமர் தெரிவித்தார்.

"மால்டா சம்பவத்தில் ஒன்பது பத்துப்பேர்தான் கொல்லப்பட்டனர். ஆனல் பாகிஸ்தான் பத்திரிகைகள் மால்டாவில் 100 பேர் கொல்லப்பட்டதாகவும் 1500 பெண்கள் கடத்தப்பட்டதாகவும மிகைப்படுத்திச் செய்திகள் வெளியிட்டன. மால்டாவில் சென்றமாதம் 20ந் திகதி தொடக்கம் அமைதி நிலவுகிறது. உண்மையில் மால்டாவில் நடைபெற்றது வகுப்புக்கலகமல்ல" என்று பிரதமர் கூறினர்.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பவங்கள்பற்றி விபரமாக எதையும் அறிந்து கொள்ளமுடியவில்லையாயினும் அங்கு பெருமளவில் கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதென்று தெளிவாகத் தெரிகிறதெனப் பிரதமர் கூறினர்.

---

பெரிய கல்லூரி பாடசாலை

## தலைமை ஆசிரியர் தெரிவுக்கு வாக்கெடுப்பு தேவையில்லை

### பட்டிருப்பு எம். பி. அறிக்கை

பட்டிருப்பு, சனி

பெரிய கல்லாறு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலைக்குத் தலைமையாசிரியரைத் தேர்ந்தெடுப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. திரு. வி. சாமித்தம்பி திரு. வி. நாகமணி ஆகிய இருவர்களில் எவரைத்தலைமையாசிரியராக நியமிப்பது என்ற பிரச்சினை அங்கு எழுந்துள்ளது. இதுபற்றிய முடிவுத் தீர்மானத்துக்கு ஜன வாக்குக் கணிப்பு ஒன்றை நடாத்த வேண்டும் என மட்டக்களப்புப் பகுதி உதவி வித்தியாதிபதி பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கத்துக்கு அறிவித்திருந்தார்.

இவ்விஷயம் பற்றி திரு. இராசமாணிக்கம் கல்வி மந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

"பெரிய கல்லாறு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியரைத் தேர்ந்தெடுப்பதற்குப் பொதுமக்கள் வாக்கெடுப்பொன்றை நடாத்தும்படி மட்டக்களப்பு உதவி வித்தியாதிபதி எனக்கு அறிவித்துள்ளார். மக்களின் வேண்டுகோளின் பெயரால் திரு. வி. ராசமணியைத் தலைமையாசிரியராக நியமிக்கும்படி நான் வலியுறுத்தியுள்ளேன். ஆனல் திரு சாமித்தம்பிக்குத்தான் அப்பதவி உரியதென்று கல்வி இலாகா கருதுவதாகத் தெரிகிறது.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களிடையே இது பற்றி ஒரு வாக்கெடுப்பு நடாத்துமாறு கல்வி மந்திரி அறிவித்துள்ளார்.

தலைமையாசிரியர் தெரிவுக்கு ஜன வாக்குக்கணிப்பொன்று தேவையில்லை என்பதை மார்ச் மாதம் 10-ம் திகதியன்று கல்குடா, மட்டக்களப்பு எம். பிக்களும் நானுமாக தந்தி மூலம் கல்வி மந்திரிக்குத் தெரிவித்திருந்தோம். இப்பேற்பட்ட ஒரு வாக்கெடுப்பினல் கிராம மக்களிடையே அநாவசியமான மனஸ்தாபங்களும் பேட்டிகளும் ஏற்படலாம் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம். எமது ஆட்சேபனையையும் மீறி ஜன வாக்கெடுப்பை எடுப்பதற்கு இலாகா தீர்மானித்திருந்தால், பெற்றோர்கள் திரு. நாகமணி, திரு. சாமித்தம்பி ஆகிய இருவர்களில் எவரைத் தலைமை ஆசிரியராக விரும்புகிறர்கள் என்னும் அடிப்படையிலேயே வாக்கெடுப்பு நடைபெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜன வாக்கெடுப்புப் பற்றிய தீர்மானத்தால் ஏற்கெனவே கிராமத்தில் பிரசார போட்டிகளும் பிரிவினைகளும் ஏற்பட்டுள்ளது. தலைமை ஆசிரிய நியமனத்துக்கு இந்த முயற்சியைக் கையாளுவதால் கிராமத்தில் போட்டி பூசல்களை ஏற்படுத்துவதோடு தேவையற்ற பழக்க மொன்றுக்கும் அடிகோலுவதாகும். திரு. நாகமணியைப் பதவியில் அமர்த்துமாறு நான் உங்கள் முன்னிலையில் சிபார்சு செய்துள்ளேன். திரு. சாமித்தம்பியை பதவியிலமர்த்த விரும்புவோரும் அவ்வாறு தங்கள் முன்னிலையில் கூறவேண்டும். வாக்கெடுப்பொன்று இல்லாமலே அதிபரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தங்களைச் சார்ந்ததே. இது விஷயத்தில் பாரபட்சம் காட்டாது தீர்மானம் செய்யும்படி வேண்டுகிறேன்."

---

## பாதுகாப்புச் சபைக்கூட்டம்

நியுயோர்க், மே 12.

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக மீண்டும் விவாதிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபை இம்மாதம் 22-ம் திகதி கூடுமென்று எதிர்பார்கப்படுகிறது.

---

## லிஸ்பனில் 1000 மாணவருக்கு காவல்

லிஸ்பன், மே 11

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் சர்வகலாசாலை மாணவர்களும், அவர்கள் குடும்பத்தினருமாக 1000 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். மாணவர் கிளர்ச்சியைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

---

## அமெரிக்கா பற்றி அயூப்கான்

கராச்சி, மே 11

இந்தியா விஷயமாக ரஷ்யாவும், அமெரிக்காவும் ஒரே கொள்கையை நோக்கி வந்து கொண்டிருப்பதாயும், இந்தியாவுக்கு ஆக்கிரமிப்பு நோக்கமிருக்கிறதென்றும், அமெரிக்காவின் போக்கினல் தமது பாதுகாப்புக்குஇந்தியாவைச்சுற்றியுள்ள நாடுகளுடன் பாகிஸ்தான் ஒப்பந்தம்செய்து கொள்ளவேண்டும் என்றும் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் கூறினர்.

---

## அமெரிக்க 7வது அணியை தயாராக இருக்க உத்தரவு

### உயர் அதிகாரிகளுடன் ஜனதிபதி கென்னடி ஆலோசனை

வாஷிங்டன், மே 13

லாவோசில் நிலைமை மோசமாகிவருவதால் தென்கிழக்காசிய பகுதிக்குச் செல்வதற்குத் தயாராக இருக்குமாறு அமெரிக்க கடற் படையின் ஏழாவது அணியை அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எப். கென்னடி உஷார்படுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க், பாதுகாப்பு மந்திரி, படைத்தளபதி ஆகியோருடன் ஜனதிபதி கென்னடி நேற்று இரண்டு தடவைகள் ஆலோசனை நடத்தினர்.

வெளிவிவகாரமந்திரி, பாதுகாப்புமந்திரி, படைத்தளபதி ஆகியோர் வெளிநாடு சென்றுவிட்டு சென்ற வெள்ளிக்கிழமைதான் வாஷிங்டன் திரும்பினர்.

லாவோசில் வடபகுதியில் கம்யூனிஸ்ட் படைகளான இடதுசாரி பதட்லாவோஸ் படைகள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன. 'நாம்தா என்ற நகரைக் கைப்பற்றியபின் மீக்கியான் நதியையும் கடந்து தாய்லாந்தின் எல்லைக்கு மிகச் சமீபத்தில்இடதுசாரிப்படைகள் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு லாவோசில் இடதுசாரிப்படையினரின் கடும்தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் வலதுசாரிப்படைகளைச் சேர்ந்த இரண்டாயிரம் துருப்புக்களும் சிவில் அதிகாரிகள் பலரும் தாய்லாந்துக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர்.



பெருமளவில் அகதிகள் வந்து குவிவதால் தாய்லாந்து அரசாங்கம் கவலை தெரிவித்துள்ளது.

நிலைமை மோசமாகி வருவதாகவும் மன்னர் தலைநகரான லுவாங்பிரபாங்மீதும் தலைநகர் வியன்டைன்மீதும்இடதுசாரிப்படைகள் தாக்குதல் நடத்தக்கூடுமென்று அஞ்சப்படுகிறது.

**முற்றுகை நிலை பிரகடனம்**

லாவோசில் இப்பொழுது முற்றுகை நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

லாவோசின் வலதுசாரி அரசாங்கம் உதவிப் பிரதமர் ஜெனரல் பூமிநொசவான் நேற்று ரங்கூனில் பர்மிய அரசாங்க அதிபர் ஜெனரல் நீவினைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் வியன்டைன் திரும்புகிறர்.

"லாவோசைக் கைப்பற்றிவிட முடியுமென்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் வெறும் மிரட்டல் என்றும் கம்யூனிஸ்ட்டுகள் கருதுவார்களேயானல் அவர்கள் தப்புக்கணக்குப் போட்டவர்களாவார்கள்" என்று அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

---

## 'முத்தமிழ் வளர்ச்சிக்கு நாடகங்கள் அவசியம்'

### நாடக அரங்கேற்றத்தில் மட்டக்களப்பு எம்.பி. கருத்து

மட்டக்களப்பு, சனி

"முத்தமிழிலும் சிறப்புற்று விளங்குவது நாடகத் தமிழே. இயலும் - இசையும் ஒன்ருகச் சேர்ந்துதான் நாடகத் தமிழ் உருவாக முடியும். ஒரு நாடகம் சிறப்புற் று விளங்க, இயலும்-இசையும் அவசியம். ஆகவே முத்தமிழும் வளர்ச்சியடைய நாடகங்கள் அவசியம்.

மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த, சீலாமுனை இளைஞர் கலைக் கழகத்தினரால் உருவாக்கப்பட்டு, அரங்கேற்றப்பட்ட, "விஷ ஊசி" என்னும் சமூக நாடகத்திற்குத் தலைமை தாங்கிய மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராஜதுரை தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. இராஜதுரை தொடர்ந்து பேசியதாவது:-

இன்றைய சினிமாவிலே மூழ்கி, சினிமா உலகிலேயே சஞ்சரிக்கின்ற நம்மிற் சிலர், நாடகத்தை வெறுக்க ஆரம்பித்துள்ளனர். சினிமாவை உருவாக்கிய பெருமை நாடகத்திற்குத்தான் உண்டு. ஆகவே சினிமாவிலே ஊறிக் கிடக்கும் நாம் நாடகத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டோமானல், அது நாடக வளச்சியை மட்டுமின்றி, முத்தமிழ் வளர்ச்சியையே பாதிக்கும்.

நடிபபுத்துறையிலே இன்று உலகப் புகழ் பெற்று விளங்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நாட்டிய,நடிகரமணி பத்மினி போன்றவர்களெல்லாம், ஒரு காலத்தில் நாடக மேடைகளில் தோன்றி, நடித்தவர்களே. ஆனல் நம் கிராமங்களில் அரங்கேற்றப்படும் சிறு சிறு நாடகங்களில், நாம் எடுத்த எடுப்பிலேயே சிவாஜி கணேசனையும், சரோஜாதேவியையும் எதிர்பார்க்கமுடியாது. இளைஞர்களுக்கு நல்ல ஆதரவு கொடுத்து, அவர்கள் அடிக்கடி பல நாடகங்களை மேடையேற்ற ஆக்கமும், ஊக்கமும் அளித்து வந்தால், இன்றில்லாவிட்டாலும் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின்பாவது, நம் நாட்டிலும், ஓர் சிவாஜி கணேசனே, அல்லது சரோஜாதேவியோ நிச்சயம் உருவாகமுடியும்.

ஆகவே மக்களைப் புகழேணியின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் சக்தி நாடகத்திற்கு உண்டு. புதிய கருத்துக்களையும், பண்பாட்டையும் நாடகங்கள் மூலம் பரப்பி, ஓர் புதிய சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும்.

சர்வகலாசாலை மாணவர் திரு. சி.மௌனகுருவினல் தயாரிக்கப்பட்ட இந்த "விஷ ஊசி" நாடகம் பலவகையாலும் சிறந்து விளங்கியது.

---

## ஸெராஜ் எகிப்து வந்தார்?

எகிப்து, மே 13

ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சிரியா தனியாகப் பிரிவதற்கு முன்னர் ஐக்கிய அரபுக் குடியரசின் உதவி ஜனதிபதியாகவிருந்த கேணல் ஸெராஜ் சிரியாவில் சிறையிலிருந்து தப்பியபின் நீர்மூள்கிக் கப்பலில் எகிப்துக்குத் தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

---

## பிகார் கவர்னர்

பாட்ன, மே 12.

பிகார் ராஜ்ய கவர்னராக திரு. அனந்தசயனம் அய்யங்கார் இன்று பதவியேற்ருர்.

---

## வாழ்த்துச் செய்திகள் குவிகின்றன

புதுடில்லி, மே 13

இந்தியாவின் புதிய ஜனதிபதியாகப் பதவியேற்றுள்ள டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனுக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்துள்ளன.

இலங்கை கவர்னர்ஜெனரல் திரு.வில்லியம் கோபல்லவா, பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான், பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத், அமெரிக்க ஜனதிபதி ஜோன் எப். கென்னடி ஆகியோரும் வாழ்த்துச்செய்தி அனுப்பியுள்ளனர்.

---

## மற்றுமிரு குண்டுகள் பரீட்சை

வாஷிங்டன், மே. 13

அமெரிக்கா நேற்று மற்றுமிரு அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்து பசிபிக்கில் கிறிஸ்மஸ் தீவில் பூமிக்குமேல் ஒரு அணுக் குண்டு நெவாடா தளத்தில் நிலத்துக்கடியில் மற்றொரு குண்டும் பரிசோதனை செய்யப்பட்டன. இந்த இரு குண்டுகளும் நடுத்தர சக்திவாய்ந்தவை என்று அமெரிகக அணுசக்திக் கமிஷன் அறிவித்தது.

பூமிக்குமேல் நடைபெற்றுவரும் அமெரிக்க அணு ஆயுதப் பரீட்சையில் இது பததாவதாகும். நிலத்துககடியில் நடைபெற்றுவரும் பரீட்சைத் தொடரில் இது 32-வது.

---

## 200 தஸ்தாவேஜுகளில் கையெழுத்து

புதுடில்லி, மே 13

இன்று ராஷ்டிரபதி பதவியிலிருந்து விலகிய டாக்டர் ராஜேந்திரபிரசாத் நேற்று பல அறிஞர்களுக்குப் பேட்டியளித்தார். பல தஸ்தாவேஜுகளைப் பார்வையிட்டார். சுமார் 200 தஸ்தாவேஜுகளில் அவர் கையெழுத்திட்டார்.

### மணி வாக்கு

பொதுமக்களிடையே உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால் சமூக பொருளாதார உயர்வு தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். மக்கள் அனைவருக்கும் சமசந்தர்ப்பம் எப்போது ஏற்படுகிறதோ அப்போது வகுப்பு, குரோஷ்டி வாதங்களும் மறையும். ஏழ்மையும், வேலையின்மையும் நாட்டுக்கு இரு பெரிய தடைகள். அவற்றை நீக்க எல்லா முயற்சியும் செய்யப்பட வேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

ஈழநாடு
EELA NADU

EELA NAD'J: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 1 உ (14-5-62)

## பத்திரிகை மசோதா

சென்ற வாரம் வெளியான இலங்கைப்பத்திரிகை நான்காவது நகல் மசோதாபற்றி இதுவரை இலங்கைப் பத்திரிகைகள் ஒன்றுகூட கருத்தை வெளியிடவில்லை. என்றாலும் சென்னை "ஹிந்து" பத்திரிகை, இம்மசோதா பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஜனநாயக வளர்ச்சியையும் பாதிக்குமென்றும், சர்வாதிகார ஆட்சிக்கு வழிசெய்யுமென்றும் தலையங்கம் எழுதி எச்சரித்துள்ளது. பாரதூரமான இம்மசோதாவைப்பற்றி இலங்கைப் பத்திரிகைகள் எழுதாததே இங்கு பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதற்கு ஓர் அத்தாட்சியாகும்.

இலங்கையில் இரு முக்கிய பத்திரிகை ஸ்தாபனங்கள் ஏகபோகமான முறையில் நடந்து வருவதாகவும், அந்த ஏகபோகத்தைக் கலைத்து, அதைப் பரவலாக்கி, கார்ப்பரேஷன் நிர்வாகத்திற்கு மாற்றப்போவதாகவும் ஏற்கெனவே சிம்மாசனப் பிரசங்கமூலம் அரசாங்கம் அறிவித்திருந்தது. சென்ற பொதுத் தேர்தலின்போது அவ்விரு ஸ்தாபனங்களைச் சேர்ந்த பத்திரிகைகளும் எதிர்ப்பு மனப்பான்மை காட்டிய காரணமாகவே, இம்முடிவுக்கு அரசாங்கம் வர நேரிட்டிருக்க வேண்டும். இரு ஸ்தாபனங்களும் எதிர்ப்பு மனப்பான்மை காட்டியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுத் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைத் தொழிலில் ஏகபோக உரிமை இருப்பது சரியா இல்லையா? என்பது விவாதத்திற்குரிய விஷயம். ஆனால் இப்போது கொண்டு வரப்பட்டு, அரசாங்க பார்லிமெண்ட் கட்சியால் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளதாகக் கூறப்படும் இம்மசோதா, ஏகபோகத்தைக் கலைப்பதுடன் நிற்காமல், "ஹிந்து" பத்திரிகை கூறுவது போல் பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதாக இருக்கிறது. மந்திரிக்குப் பிடிக்காத ஒரு விஷயம் ஒரு பத்திரிகையில் வெளியாகிவிட்டால், அப்பத்திரிகையை இம்மசோதாப்படி மந்திரி நிறுத்தியும்விட அதிகாரமுண்டு. இம்மசோதா விதிகளை மீறிய பத்திரிகைக்காரருக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் அபராதமாக விதிக்கப்படுமாம். இது மட்டுமன்றி ஒரு செய்தியைத் தெரிவித்தது யார் என்ற ரகசியத்தையும் வெளியிடவேண்டுமென்பது மற்றோர் நிபந்தனை. இது சென்னைப் பத்திரிகை கூறுவதுபோல் பத்திரிகை சுதந்திரத்தையும் தர்மத்தையும் பாதிப்பதாகும்.

இலங்கையில் ஜனநாயகம் வளர்ந்து மக்கள் சுபீட்சமாக சுதந்திரமாக வாழவேண்டின் இங்கு பத்திரிகை சுதந்திரம் காப்பாற்ற வேண்டியதவசியம். ஆனால் இப்போது அரசாங்கம் கொண்டுவந்துள்ள மசோதா, பத்திரிகையின் சுதந்திரத்தைப் பெரிதும் பாதிப்பதாகவும், இங்கு சுதந்திரமாக பத்திரிகை நடத்த முடியாமலும் போவதாக இருக்கும். அவசர நெருக்கடி காலத்தில் இவ்வித தடைகளைப் போடுவதாயின் அதில் அர்த்தமுண்டு. வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பாமல் தடுக்க வேண்டியதும் அவசியமே. சாதாரண சட்ட மூலம் இதைத் தடுக்கலாம். ஆனால் இதற்காக பத்திரிகை சுதந்திரத்தை நிரந்தரமாகப் பறிப்பது இங்கு ஜனநாயகம் வளர முடியாமல் தடுப்பதாக முடியும்.

பத்திரிகைத் தொழில் மிகப் புனிதமானது. நாட்டுமக்களுக்கு நல்ல சேவை செய்வது. இதை வளர்க்கவும் இதில் ஈடுபட்டவர்களுக்குக் கூடுமான வசதிகளை அளிக்கவும் வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அவசியமாயின் ஏகபோகத்தைத் தாராளமாகக் கலைக்கட்டும். ஆனால் இந்த மசோதாவோ, பத்திரிகைத் தொழிலையே ஒரு குற்றத் தொழிலாகச் சந்தேகித்து, அதில் ஈடுபட்டவர்களை பயமுறுத்துவதாக உள்ளது. இது ஒரு ஜனநாயக அரசாங்கத்துக்கே நல்லதாகாது.

# ஜனாதிபதிபதவியேற்றுள்ள தத்துவஞானி

"பாரத நாட்டுத் தலைவர்களிடமிருந்து உலகத்திலுள்ள மக்கள் அனைவருமே நல்ல நெறிகளையும் தர்ம முறைகளையும் கற்றுக்கொள்வார்கள்"

இவ்வாறு டாக்டர் ராதா கிருஷ்ணன் தமிழ் நாட்டுச் சமய நெறிபற்றி ஒரு சமயம் சொற்பொழிவாற்றிய போது குறிப்பிட்டார்.

உலகத்திலேயே இன்று ஒரு பெரிய தத்துவஞானியாகவும் அரசியல் நிபுணராகவும் விளங்கும் டாக்டர் ராதா கிருஷ்ணன் பல உண்மைகளையும் தத்துவங்களையும் சர்வதேச சகல மக்களும் தெரிந்து கொள்ளுவார்கள் என்பதை டாக்டர் ராதா கிருஷ்ணன் அப்போது கருதியிருக்கமாட்டார். ஆனால் அவர் குறிப்பிட்ட இந்திய தலைவர்கள்போல அவரையும் உலக மக்கள் போற்றிக் கொண்டாடுவார்கள் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

"திருக்குறளை வெவ்வேறு மதத்தினரும் போற்றிவருகிறார்கள். அறம், பொருள், இன்பம் ஆகிய துறைகளில் அகிம்சை நெறியைக் கடைப்பிடிப்பது பற்றி அந்நூல் வலியுறுத்துகிறது. பழைய தமிழர் கலாச்சாரத்துக்கும் அகிம்சா நெறிக்குமிடையேயிருந்த நெருங்கிய தொடர்பை இது எடுத்துக் காட்டுகிறது. பௌத்தர்கள், ஜைனர்கள், சைவர்கள், வைணவர்கள் ஆகிய பலரும் போற்றும் இத் திருக்குறள் 'பொது மறை' என்றழைக்கப்படுகிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரு தமிழ்க் காப்பியங்களும் கற்பு, துறவு ஆகியவற்றின் தர்மத்தை எடுத்து விளக்குகின்றன. மனு வேந்தனின் நீதி நெறிகளும் சர்வதேச நெறியாகக்கொள்ள வல்லவை. இந்தியத் தலைவர்களிடமிருந்து உலக மக்கள் அனைவருமே தர்ம நெறிகளைக் கற்றுக்கொள்வார்கள்."

இவ்வாறு பழைய தமிழ் நாட்டுப் பெரியார்களின் பெருமை போற்றியவர் இன்று தமது தாய் நாட்டின் மிக உயர்ந்த பதவியிலமர்கிறார். நாகரிக உலகிலே வாழ்ந்து வரும் இந்த மகா தத்துவ ஞானியினால் அப்பதவியே பெருமையடையும் என்பதில் சந்தேகமில்லை.

மேல் நாட்டுத் தத்துவங்களிலும் தமிழ் நாட்டுத் தத்துவங்களிலும் பெரிதும் பாண்டித்தியம் பெற்று உயரிய ஆங்கில மொழியில் தத்துவ நூல்களை இயற்றித் தந்துள்ளார். இவர்களது நூல்களுக்கு ஈடு இணை இல்லை என்றே கூறலாம். தமிழ் நாட்டுத் தத்துவங்களை உயரிய வகையில் உலக மக்களுக்கு எடுத்துக்காட்டியுள்ள பெருமை டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களுக்குண்டு.

அன்பு வாழ்க்கையிலும் ஒற்றுமையிலுமே உண்மையான சமய வாழ்க்கை புலனாகும் என்றார். சக வாழ்வில் மனிதன் மனிதனுக்குப் புரியும் சேவைகளேயன்றி உருத்திராக்கம், விபூதி, தீர்த்தங்கள் மனிதனைத் தூயவனாக்கப் போவதில்லை. சைவம், பௌத்தம், ஜைனம் ஆகியவை போற்றும் அகிம்சா தர்மத்தினாலேயே உலக சமாதானத்தைப் பெறமுடியும் என்பது அவர் கருத்து.

சர்வமத ஒற்றுமையைக் கண்ட இப்பெரியார் இந்து மதத்தைச் சீர்படுத்தவே பௌத்த மதம் உதித்ததென்றார். இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களைப் பௌத்தம் தழுவியுள்ளது. கிறிஸ்து நாதரின் வாழ்க்கை அனுபவ அடிப்படையில் எழுந்த மதமே கிறிஸ்தவ மதம். தான் சென்ற பாதையில் ஏனையோரும் சென்று கடவுளை அடைய வழிகாட்டுகிறார் கிறிஸ்த்து நாதர். மனிதனுடைய ஆத்மாவுடன் இறைவன் கலந்திருக்கிறான் என்கிறது இந்து சமயம். ஆன்மாவிலுள்ள ஆத்மீக உணர்வைத் தட்டியெழுப்பி இறைவனைக் காணுவதே இந்து மத வழி. "உன் உடலிலே பரிசுத்த ஆத்மா கோவில் கொண்டிருக்கின்றது. கடவுள் உன்னிலேயே கோவில் கொண்டிருப்பதை அறிவாய்" என்கிறது கிறிஸ்தவ தத்துவம். சரீர துன்பத்தையும் உலக வாழ்க்கையின் தோல்வியையும் ஆத்மீகத்தின் வெற்றியையும் அறிவுறுத்தும் அடையாளச் சின்னமே கிறிஸ்தவ சிலுவை. இறைவனது நினைவிலும் அவனது சேவையிலும் சிந்தனையை ஒப்படைக்கும் ஒருவனே சரியான சமய வாழ்வு வாழ்கிறான் என்கிறது இஸ்லாமிய சமயம். இவற்றை எல்லாம் ஒன்றுபடுத்தி ஆராய்ந்து பொது மக்களிடையே சர்வ மத ஒற்றுமையை விளங்கவைத்துள்ளார் டாக்டர் ராதா கிருஷ்ணன்.

"மனிதனையும் கடவுளையும் பற்றியதே சமயம். சமயம் ஒரு வாழ்க்கை முறை. ஆகவே அதை வாழ்ந்து பார்க்கவேண்டும். குறிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கை எதுவும் அதில் இல்லை. இறைவனை அடைவதற்கு பலவித வழிகளை மேற்கொள்ளச் சமயம் அனுமதி வழங்குகிறது. நெருப்பு எவ்வாறு பெறப்பட்டாலும் சுடர் ஒருமாதிரியாகத்தான் இருக்கமுடியும் என்கிறது உபநிடதம். சகல மதங்களும் காண்பது ஒரு கடவுளையே. அதற்காகச் சகல மதங்களும் ஒன்று என்பதற்கில்லை. ஒவ்வொரு மதமும் தனது தனித்தன்மையை உடையது."

இன்றைய உலகில் ஒரு சமயத்தவர் ஏனைய சமயம்பற்றி இங்கு அறிந்துகொள்ளமுடிகிறது. சமய அடிப்படையில் உலக மக்கள் ஒற்றுமையாக இருப்பதானால் குறிப்பான ஒரு சமயத்தின் பெயரால் அன்றி சகல மத ஒற்றுமை ரீதியில்தான் ஒற்றுமையாக இருக்கமுடியும் என்பது டாக்டரின் கருத்து. சமய நெறியில் பல பாதைகள் உள. அவற்றில் எதில் சொன்னாலும் பயனுண்டு என்றார். இந்த உண்மையைத் தெரிந்துகொண்டால் தனது சமயமல்லாத ஏனைய சமயம் பற்றியும் உணர்ந்துகொள்வதை மக்கள் விரும்புவர் என்றார், இச்சகோதரத்துவ மனப்பான்மையால் ஒவ்வொரு சமயமும் நன்கு உலகில் நிலவலாம். இதனால் சர்வதேச தர்ம நெறியை வளர்க்கமுடியும் என்பது டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களின் உயரிய கருத்து.

— கே. எஸ்.

# 7 அரசியல் கட்சிகள் அங்கீகாரம்

கொழும்பு, ஞாயிறு

மூதூர், வெலிமடை, அநுராதபுரம் ஆகிய தொகுதிகளின் இடைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஏழு அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் 500 ரூபாய் கட்டுப்பணமாகக் கட்டலாம். இதர அபேட்சகர்கள் ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, யு. என். பி., தமிழரசுக்கட்சி, இலங்கை இந்திய காங்கிரஸ், ஜாதிகவிமுக்திபெரமுனை, எம். ஈ. பி. ஐக்கிய இலங்கை கட்சி ஆகிய ஏழு கட்சிகளுமே அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாகும்.

எம். ஈ. பி. அநுராதபுரத்திலும், வெலிமடையிலும்போட்டியிடுகிறது. ஜாதிக விமுக்தி பெரமுனை வெலிமடையில் மட்டும் போட்டியிடுகிறது. வெலிமடையில் மொத்தம் ஏழுகட்சிகளும் அநுராதபுரத்தில் ஆறு கட்சிகளும் போட்டியிடுகின்றன. மூதூரிலும் ஆறு கட்சிகள் போட்டியிடுகின்றன. தமிழரசுக்கட்சி மூதூரில் மட்டும் போட்டியிடும்.

கட்சி அபேட்சகர்களுக்குரிய சின்னங்கள் அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்தினமான இம்மாதம் 22ந் திகதி ஒதுக்கப்படும்.

அநுராதபுரத் தொகுதியில் யு. என். பி. தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஆரம்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தில் மழை சக்கை போடு போடுகிறது. வெக்கை தீர்ந்து பூமி குளிர்ந்தது. வானத்திலே ஒரே மப்பும் மந்தாரமும். இந்தக் கோடையிலே இந்த மழை பொழிந்ததால், நோயெல்லாம் நீங்கி மக்களுக்கு நல்ல சுகம் ஏற்படுமென்கிறார் நண்பர். மரம் செடிகளெல்லாம் புத்துயிர் பெற்று மகிழ்கின்றன. எல்லாம் அவன் கருணை யல்லவா?

* * *

சென்ற கலக காலத்திலே யாழ்ப்பாணத்தில் சேதமான புத்தர் கோவில், புதுப்பிக்கப்பட்டு நேற்று அங்கு, கண் திறப்பு விழா நடைபெற்றது. கலகத்தில் இக்கோவில் சேதமாகியிராவிடில், இவ்வளவு நன்றாகப் புதுப்பிக்கப்பட்டிருக்குமா? நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே!

இந்த விகாரையிலுள்ள பௌத்த பிக்குவை பல மாதங்களுக்கு முன் பார்த்தேன். நல்லவர். சிங்களம் மட்டுமே தெரியும். என்றாலும் எல்லோருடனும் நட்பு முறையில் பழகி பலரது அன்பையும் மதிப்பையும் பெற்றுள்ளார்.

விகாரை இருக்கும் அந்த இடம் யாருடையது தெரியுமா? வண்ணை வைதீச்வரருடையதாம்! நீண்டகாலமாக குத்தகைக்கு அது விடப்பட்டுள்ளதாகக் கேள்விப்பட்டேன். மகாவிஷ்ணுவின் அவதாரமான புத்தர் பிரானுக்கும், சிவபெருமானுக்கும் இங்கு எவ்வளவு நட்புறவு!

* * *

எட்டியாந்தோட்டையிலிருந்து இரவு 10 மணிக்கு மேல் ஒரு டெலிபோன் வந்தது. இ. ஜ. கா. தலைவரான அஸீஸ், 'மிகத் துக்கச் செய்தி' என்று கூறி, கே. ஜி. எஸ். நாயர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். திடுக்கிட்டுப் போனேன்.

நாயரைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? மலை நாட்டிலே அவரைத் தெரியாத சிங்களவரும் கிடையாது. எட்டியாந்தோட்டை வீரச்சிங்கம் அவர். மலைநாட்டுத் தமிழரின் உரிமைக்காக மிகத்துணிச்சலுடன் அவர் பல போராட்டங்களிலும் ஈடுபட்டவர். உயிரைத் துரும்பாக மதித்து, ஆபத்தான சூழ்நிலையிலும், தலைமை வகித்து நடத்தும் ஒரு கமாண்டர்.

அவருக்குத் தையல் தொழில், ஆங்கிலம் தெரியாது. என்றாலும் காங்கிரஸில் பல பொறுப்பான பதவிகளை வெற்றியுடன் வகித்துள்ளார், மாஸ்கோ, சீனம் முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துள்ளார்.

உருளிவள்ளி தோட்ட சத்தியாக்கிரகம், பிரதமர் காரியாலய சத்தியாக்கிரகம் இவற்றில் தீவிரமாக ஈடுபட்டு, மலைநாட்டுத் தமிழரின் குடி உரிமைகளுக்காகப் போராடியுள்ளார். அஸீஸின் வலக்கரம். 'லெவ்வயர்'

வயது 50 தான். மனைவி, 3 புதல்விகள், இரு பிள்ளைகள் இவர்களை விட்டுவிட்டு. திடீரெனப் பிரிந்தார். அவர் பிரிவு, மலைநாட்டுத் தமிழருக்கும் சிறப்பாக அஸீஸுக்கும் பெருநஷ்டம். அவர்களுக்கெல்லாம் நமது அனுதாபங்கள். மலைநாட்டுத் தமிழருக்குப்பூரண குடிஉரிமைகள் கிடைக்கும்போதுதான் அவரது ஆன்மாவும் சாந்தி அடையும்.

* * *

இரப்பவர்க்கீய வைத்தார்
ஈபவர்க் கருளும்
வைத்தார், கரப்பவர்
தங்கட்கெல்லாம்
கடுநரகங்கள் வைத்தார்,
பரப்பு நீர்க்
கங்கை தன்னைப் படர்சடைப்
பாகம்
வைத்தார், அரக்கனுக்கு
அருளும் வைத்தார்
ஐயனையாறனாரே.

—திருநாவுக்கரசர்

# இரும்பு எஃகு தொழிற்சாலை என்ஜினியர்கள்

## இந்தியாவில் பயிற்சிபெறச் செல்வர்

கொழும்பு, ஞாயிறு

இந்தியாவிலுள்ள பிலாய் எஃகுத் தொழிற்சாலையில் ஆரம்ப பயிற்சி பெறுவதற்கா இலங்கை இரும்பு எஃகு கார்ப்பரேஷனைச் சேர்ந்த 28 முக்கிய உத்தியோகஸ்தர்கள் விரைவில் இலங்கையிலிருந்து செல்லவிருக்கின்றனர்.

பிலாய் எஃகுத்தொழிற்சாலை ரஷ்யர்களால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியும் முழு அளவில்நடை பெற்று வருகிறது.

இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் இரும்பு எஃகு தொழிற்சாலையின் கார்ப்பரேஷனைச் சேர்ந்த என்ஜினியர்கள் ரஷ்யா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய இடங்களிலும் பயிற்சிபெறச் செல்வர்.

இந்தியாவில் பயிற்சிபெறச் செல்பவர்கள் 1963-ம் ஆண்டில் இலங்கை திரும்புவரென்றும் 1963-ம் ஆண்டில் இரும்பு எஃகு தொழிற்சாலை நிறுவப்படுமென்றும் கார்ப்பரேஷன் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

---

### துர்க்கை அம்மன் ஆலய புனருத்தாரணம்

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் புனருத்தாரண வேலைகளை விரைவில் பூர்த்திசெய்ய பொது மக்களின் ஆதரவினைத்திரட்டுமுகமாக மேற்படி ஆலய மண்டபத்தில் மூன்று தினங்கள் சமயப்பிரசாரக் கூட்டம் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தொடருக்கு இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. எஸ். தியாகராஜா, வைத்தீஸ்வர வித்தியாலய திரு. ச. அம்பிகைபாகன், வழக்கறிஞர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோர் தலைமை வகித்தனர். திரு. ஆறுமுகம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பண்டிதர் வே சங்கரப்பிள்ளை ஆகியோருட்பட பலரும இந்த ஆலயத்தின் சிறப்புகளையும், ஆலய வளர்ச்சிக்கு செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் விளக்கிப் பேசினர்.

---

### வரட்சியின்பின் மழை

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த பலவாரங்களாக கடும் வரட்சி நிலவியது. கடும்வெயிலைத் தாங்கமுடியாமல் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர். இந்த நிலையில் திடீரென வியாழக்கிழமை மாலைதொடக்கம், இடி முழக்கத்துடன் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது இப் பகுதி மக்களுக்குப் பெரும கிழ்ச்சியளித்துள்ளது.

---

### தரம் குறைந்த...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு இருந்தும்கூட நம்மில் குறிப்பிடக்கூடிய சில கலைஞர்களுக்கு வருமானமின்றி ஓய்வாக இருக்கின்றனர். இதனைக் குறிப்பிடுவதன் நோக்கம் என்னவென்றால் நமது நாட்டின் தேவையை நாமே பூர்த்தி செய்துகொள்ளலாம் என்பதற்காகவே. இசைக் கலைஞர்கள் வர்ழ்க்கை வளமுற்றால் தான் இசைக் கலையை வளர்க்க அவர்களுக்கு ஊக்கம் பிறக்கும். இந்தியாவிலிருந்து சிறந்த கலைஞர்கள் வருவதனை நாம் ஒரு போதும் தடைசெய்யப் போவதில்லை. எமது வாழ்க்கைக்கு இடர் விளைவிக்கின்ற தரம் குறைந்த கலைஞர்கள் வருவதனைத் தடைசெய்ய வேண்டும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

தெல்லிப்பழை.

"ஒரு இசையாளன்"

---

### விசாகதின பஸ்சேவை

#### பஸ் ஊழியர் நிபந்தனை

கொழும்பு, சனி

விசாக தினத்தன்று பல வீதிகளில் இ. போ. ச. பஸ்கள் ஓடமாட்டா என எதிர்பார்க்கப்படுகிறது. இ. போ. ச பஸ்சாரதிகள் கண்டக்டர்கள் விசாக தினத்தினன்று 'சில' விரதம் அனுஷ்டிக்க உத்தேசிப்பதால் அன்றைய தினம் பஸ் சேவைகள் குறைக்கப்படலாம்.

வெகு காலமாகத் தமக்கு சேவைக்கால உபகாரப் பணம் வழங்கப்படவில்லை யென்றும் பஸ் சேவை தேசியமயமாக்கப்பட்ட போது அவை வழங்கப்படலாம் என்றும் இப்போது அப்பணத்தை வழங்காவிட்டால் தாம் விசாக தினத்தன்று 'சில்' அனுஸ்டிக்கப் போவதாகவும் இ. போ. ச பஸ் ஊழியர்கள் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

பஸ் சேவை தேசியமயமாக்க முன்னரே தமக்கு வரவேண்டியிருந்த சேவைக்கால உபகாரப்பணத்தைக் கொடுப்பதாக இ. போ. சபை பல தடவைகள் வாக்குக் கொடுத்த போதும் ஒரு பகுதி பணம் மட்டுமே தமக்கு வழங்கப்பட்டதென்றும் இ. போ. ச ஊழியர்கள் கூறியுள்ளார்கள்.

விசாக தினத்துக்கு முன்னர் மிகுதிப்பணமும் செலுத்தப்பட்டால், அத்தினமன்று தாம் வேலைக்குச் செல்லப் போவதில்லை என்று ஊழியர்கள் திட்டவட்டமாகக் கூறியிருப்பதாகத் தெரிகிறது. நீர் கொழும்பு, ரத்மலானை, இரத்தினபுரி ஆகிய பல டிப்போக்களில் நடாத்தப்பட்ட ஊழியர்கள் மகாநாடுகளில் இந்த தீர்மானம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

---

### செய்திக்கு மறுப்பு

ஷில்லாங், மே 13

இம் மாதம் முதல் திகதி பகை நாகர் கோஷ்டியொன்று பாகிஸ்தானுக்குள் தப்பிச் செல்வதற்கு அஸ்ஸாம் ராஜ்ய உயர் அதிகாரிகள் சிலர் உடந்தையாக இருந்தனரென்று பத்திரிகையில் வெளிவந்த செய்தியை அஸ்ஸாம் அரசாங்கம் வெளயிட்ட ஒரு அறிக்கையில் மறுத்துள்ளது. 'உள்நோக்கத் தூண்டுதலின் பேரில் இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது' என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

---

# மட்டக்களப்பில் மீன் நிறுத்து விற்கப்படும்

## கூட்டுறவு சங்கத்தின் மீன் விநியோகம்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்புப் பகுதியில் குறிப்பாக நகரசபை எல்லைக் குட்பட்ட மக்களின்நன்மையை முன்னிட்டு, புதிய மீன் விற்பனவு நிலையமொன்றைத் திறந்து மீனைநிறுத்துவிற்பதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கச் சமாஜம் மேற்கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி. அலுவிகார இப்புதிய மீன் விற்பனவு நிலையத்தைத் திறந்து வைப்பார்.

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த பல மாதங்களாகநாளாந்த உணவுக்குத் தேவையான மீனைப்பெறுவதில், பொது மக்கள் பெரிதும் கஷ்டம் அனுபவித்துவந்தனர்.

இப்பகுதி பொது மக்கள் நியாயமான விலையில் தமது நாளாந்த தேவைக்கானமீனைப் பெறக்கூடியதாகவும், எல்லோரும்எத்தகைய வேறுபாடின்றி, ஒரேவிலையில்மீனைப் பெறக்கூடியதாகவும் ஓர் புதிய மீன் விற்பனவு நிலையத்தை மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்துள்ளது. இப்புதிய விற்பனவு நிலையத்தில், மற்றைய இடங்களில் நடைபெறுவது போன்று, மீன் நிறுத்துவிற்கவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரசபைச் சந்தைக்குள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தினல் நடத்தப்படவிருக்கும் புதிய மீன்விற்பனையைமட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அரசாங்க அதிபர் திரு. டக்ளஸ் அலுவிகார, 15ம் திகதி காலை ஆரம்பித்துவைப்பார்.

---

### 12 பேருக்கு தலா ரு. 25 அபராதம்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டி. ஜே. கலன்சூரியா தலைமையிற் சென்ற பொலிஸ் கோஷ்டி உரும்பிராய் சுடலைக் கருகாமையிலுள்ள பனங்தோப்பில் பணம் வைத்துச் சூதாடியதாக உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த நாகன் கதிரவேலு, உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த நாகமுத்து சுந்தரம், கோண்டாவிலைச் சேர்ந்த நன்னியன் பசுபதி, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த வேலன் சின்னத்துரை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஐயன் மாணிக்கம், பொன்னு பாலசிங்கம், மாப்பாணி ஆறுமுகம், நாகன் பொன்னன், கோண்டாவிலைச் சேர்ந்த சின்னகுட்டி சேனதி, உரும்பராயைச் சேர்ந்த சின்னத்தம்பி சதாசிவம், சுழிபுரத்தைச் சேர்ந்த முருகன்வேலன், யாழ்ப்பாணம் பீச்ரோட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை, ஆகிய பன்னிருவரையும் கைதுசெய்து சூதாடிய பணத்தையும் கைப்பற்றியது.

இப்பன்னிருவர் மீதும் சுன்னுகம் பொலிசாரால் புத்தூர் கிராமக்கோர்ட்டில் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி, எதிரிகளைத் தலா ரு. 25 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

---

# "இன, மத வேறுபாடுகள் வளர்ச்சியைத் தடுக்கும்"

## இளைஞர் உரை அரங்கில் நிதி மந்திரி பேச்சு

கொழும்பு, ஞாயிறு

**தேசிய வளர்ச்சியில் பொறுப்புணர்ச்சி கொள்வதற்கான பயிற்சியும், நாட்டைத் தலைமைவகித்து நடத்துவதற்கான பயிற்சியும் இன்று இலங்கையில் மிகவும் தேவையானவையாகும். பேனை பிடிப்பவர்களாக மாத்திரம் இளைஞர்களைப் பயிற்றுவிப்பதில் இனிமேல் எதுவித பயனுமில்லை. மாதத்தில் 200 அல்லது 500 ரூபாய் வருமானத்தைத் தரக்கூடிய உத்தியோகங்களைத் தேடுவதானல் நாம் எமது சுதந்திரத்தை உண்மையிலேயே உபயோகிக்காதவர்களாவோம்.**

**நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கொழும்பு வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில் தேசிய இளைஞர் சபையின் இளைஞர் உரை அரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

நிதிமந்திரி திரு. பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

1948-ம் ஆண்டிற்கு முன்னர் மக்களால் வருங்கால சந்ததியினரின் நலனைப்பற்றி நினைப்பதற்கு முடியவில்லை. காலனி ஆட்சியில் வாழ்ந்த—சிக்குண்ட மக்கள் அவ்வாட்சியின் வரையறுப்புக்குள் வாழவேண்டியதாயிற்று. அந்தக் காலத்தில் நகரத்தில் வாழ்ந்த ஒரு சிலராலேயே உண்மையான கல்வியைப் பெறமுடிந்தது. அரசாங்கத்திற்கும், வர்த்தகத்துறைக்கும் எழுதுவினைஞர்களாகவும், அதிகாரிகளாகவும் மக்களைப் பயிற்றுவிப்பதே அக்காலக் கல்வியின் அடிப்படை நோக்கமாக இருந்தது. இன்று கிராமவாசிகள் கல்விபயிலுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. ஆனல் உத்தியோகம் தேடுவது மட்டும் இன்னும் இருந்துவருகின்றது. நாட்டின் இன்றைய தேவைகள் முன்னர் இருந்த தேவைகள் போலல்லாதவை. நாட்டின் வருங்காலம் இன்றைய இளைஞர்களுக்கும், கழகங்களுக்கும் ஒரு சவாலாகும். கல்வியின் நலன்களைப் பெருக்க வேண்டியதுடன், நாட்டைத் தலைமைவகிப்பதற்குப் பயிற்றுவதில் அதனை உபயோகப்படுத்தவேண்டும். இந்தச் சவால் புதியதல்ல. சோவியத் யூனியன் போன்ற பல நாடுகள் இதை வென்றுள்ளன. அவர்கள் பயிற்றுவிக்கும் முறை என்ன மாதிரியாக இருந்தாலும், குழந்தைப்பருவத்தில் இருந்தே நாட்டைத் தலைமை வகிப்பதற்குப் பயிற்சியளிக்கின்றார்கள்.

விவசாயம் போன்ற நாட்டின் அதி முக்கிய தேவைகளை அடையும் வழிவகைகள் வேறுபட்டனவாயிருக்கலாம். ஆனல் சாதி, இன, சமய வேறுபாடுகளுக்கு இடமில்லை. இப்படியான வேற்றுமைகள் இருந்தால் நாட்டின் வளர்ச்சிக்கே இடமில்லை.

பல மிஷனரி ஸ்தாபனங்கள் தேசிய சேவைகள் செய்துள்ளன. தேசிய சேவையை ஒரு விளையாட்டாக எண்ணக் கூடாது. ஒரு மனிதனின் மனத்திலிருந்து வெளிப்படும் அறிவும், ஆற்றலும் தேசியசேவையில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

தேசிய சேவைக்கான சட்டம் விரைவில் இயற்றப்படும். இதன்பின்னர் ஒவ்வொரு இளைஞனும் தேசியசேவைசெய்யத் தானகவே முனவருவான் என்பதில் எனக்கு ஐயமில்லை.

செல்வி ரீட்டா பெர்டினட்ஸ் நிதிமந்திரிக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் மந்திரி தனது பேச்சில் அறிவுவளர்ச்சிக்கான விஷயங்களை எடுத்துரைத்ததாகவும், அவரது உரை இளைஞர்களுக்கு வருங்காலத்தில் உள்ள பங்கைத் தெளிவுபடுத்தியதாகவும் கூறினர்.

---

### மீண்டும் வேலை!

கொழும்பு, வெள்ளி

வேலையிலிருந்து இளைப்பாறிய ஆஸ்பத்திரி அட்டெண்டன்மார்களை திரும்பவும் வேலைக்கமர்த்தும் திட்டமொன்றை திறைசேரி அண்மையில் அங்கீகரித்துள்ளது.

அட்டெண்டன்மார் தேவையான இடங்களில் தற்காலிக ஒழுங்குகள் செய்ய முடியாத பட்சத்தில் இவர்கள் வேலை செய்வார்கள். ஓய்வு பெற்றிருக்கும் இத்தொழிலாளர்களை இத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒன்று கூட்டி விபரங்கள் சேர்த்து வைக்கும்படி ஒவ்வொரு பிரிவுச் சுகாதாரப் பகுதியினரும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

அவசர காலங்களில் வேலைக்கமர்த்தப்படும் இத்தொழிலாளர்களுக்கு நாள் சம்பளம் வழங்கப்படும். ஒழுங்காக வேலை செய்து இளைப்பாறியிருக்கும் அட்டெண்டன்மார்களின் பெயர்களே இது விஷயமாகக்கவனிக்கப்படும்.

---

### நல்லெண்ணத் தூதுகோஷ்டி

கொழும்பு, வெள்ளி

வெசாக் வைபவத்தையொட்டி நல்லெண்ணக் கலாசாரக் குழுவொன்று மே-18-ம் திகதி இலங்கையை வந்தடைகின்றது. இலங்கை—இந்திய நட்புறவுச் சபையிலிருந்து வரும் இக்குழு இலங்கையில் ஜூன் 5-ம் திகதி வரை தங்கியிருக்கும்.

டெல்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கன்னல் தலைமையில் வரும் இக்கோஷ்டியில் திரு. விஜயா தர்மவர்த்தனவும் அங்கத்துவம் வகிப்பார்.

இலங்கை--இந்திய நட்புறவை வளர்த்து நல்லெண்ணத்தை நிலைபெறச் செய்யும் பொருட்டே இக்குழு இலங்கை வருகிறது. வெசாக் வைபவக் கொண்டாட்டங்களில் பங்குபற்றவரும் இக்குழு இந்திய மக்களிடமிருந்து இலங்கை மக்களுக்கு நல்வாழ்த்தையும் கொண்டுவருகிறது.

---

### ஜப்பானில் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

டோக்கியோ, வெள்ளி

50,000 ஜப்பனிய கப்பற் தொழிலாளர்கள் பங்குபற்றிய வேலை நிறுத்தம் நேற்றுடன் கைவிடப்பட்டது. மகா யுதத்தின் பின்னர் நடந்த வேலை நிறுத்தங்களில் இதுவே பெரியதாகும்.

ஏப்ரல் 23-ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தம் மே 2-ம்திகதி தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. 56 மணி வேலை நேரத்தை 48 மணியாகக் குறைப்பதாகாகக் கப்பல் சொந்தக்காரர் ஒத்துக் கொண்டதன் பேரில் மே 10-ந் திகதி மறுபடியும் ஆரம்பிக்கவிருந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. விடு முறை ஒழுங்குகளும் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

---

### ஐம்பெருங் காப்பிய விழா

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவில் ஐம்பெருங் காப்பிய விழாவொன்றை விரைவில் நடாததுவதற்கான ஏற்பாடுகளை புங்குடுதீவு இளைஞர் கழகம் செய்து வருகின்றது. இந்த விழாவில் இந்திய தமிழ் அறிஞர்களும் கலந்துகொள்வர் எனத் தெரிகிறது.

# 'தேசீய கல்வி என்பதற்கு எவரும் விளக்கம் தரவில்லை'

## நாவலப்பிட்டி தமிழாசிரியர் சங்கவிழாவில் தலைமையுரை

நாவலப்பிட்டி, சனி

நாவலப்பிட்டி தமிழாசிரியர் சங்கத்தின் வருடாந்த விழா கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. நா. முத்தையா விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:-

இன்று நாம் எங்களை யாரென்று தெரியாத நிலையில் வாழ்கிறோம். அரசாங்கத்திற்கும் எங்களை யாரென்று தெரியாது; கல்வி விற்பன்னர்களுக்கும் தெரியாது. இந்த வகையில் நாங்கள் உலகிலேயே விசித்திரப் பிராணியாக வாழ்கிறோம்.

தொழில் முறையில் நாம் எல்லோரும் ஆசிரியர்களே. அதை விடுத்து, மொழி வேறுபாடுகொண்டு, தராதர வேறுபாடு கொண்டு, பாடசாலை வேறுபாடு கொண்டு, சாதி சமய வேறுபாடு கொண்டு ஆசிரிய சமூகத்தை பல கூறுகள் போட்டுள்ளார்கள். ஆசிரிய சங்க ஒற்றுமையீனத்திற்கு இதைவிட வேறு வினை வேண்டியதில்லை.

தேசியக் கல்வியென்ெறாரு சொற்றொடர் பத்திரிகைகளிலும் அயலாரின் பேச்சுக்களிலும் காண்கிறோம். தேசியக் கல்வி என்றால் இன்னதுதானென்று வரைவிலக்கணம் கூறி விளக்கம் கொடுத்தவரைக் காணோம். மொழிக்கும் கல்விக்கும் வேறுபாடு தெரியாது மயங்குவோரைக் காண்கின்றோம். கல்வியைப் பெறுவதற்கு அதாவது மனிதனிடத்து மறைந்திருக்கும் அறிவை விளக்கம் செய்வதற்கு மொழி ஒரு கருவியே தவிர மொழிதான் கல்வியுமல்ல, அறிவுமல்ல.

சோஷலிசம் என்ற சொல் நம் அரசியல்வாதிகளின் வாயிலிருந்து அடிக்கடி கிளம்புவதைப் பார்க்கின்றோம். உண்மையில் சோஷலிசம் என்றால் உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் உலக வாழ்க்கையில் சமசந்தர்ப்பத்தை அளித்தலாகும். இப்பொருளை விளங்கியோ விளங்காமலோ சோஷலிசம் என்ற சொல்லை மாத்திரம் அழகுறப் பேசுகின்றார்கள். சோஷலிசம் சொல்லிலே இருந்தால் போதாது. செயலிலே வரவேண்டும். சோஷலிசக் கருத்தை விளங்கி அது உண்மையாகச் செயல்படுமானால் அது மகாத்மா கூறிய இராம இராச்சியத்திற்கு எம்மை அழைத்துச் செல்லும்.

### சோஷலிஸம் என்றால் என்ன?

ஒரு சமூகத்தார் விரும்பாத மொழிக் கொள்கையை அரசாங்கத்தார் சட்டத்தினால் திணித்தால் அது சோஷலிசமாகுமா? இலங்கையிற் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரே மாதிரியான கல்வியைக் கொடுப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை எதுவித வேறுபாடுமின்றி அளிப்பதே சோஷலிச கொள்கையாகும். தோட்டப் பாடசாலைகள் என்று ஒரு பிரிவும், தோட்டக் குழந்தைகள் என்று ஒரு பிரிவும், தோட்டக் கல்வி என்றொரு பிரிவும் இருக்கும்வரை கல்வியிலே குழந்தைகள் பெறும் அறிவிலோ சோஷலிசக் கருத்துக்களை அணுவளவேனும் அனுபவிக்க முடியாது. சோஷலிசத்தைப்பற்றி கனவு காணலாம். ஆனால் நடைமுறையில் நடக்க முடியாது.

தோட்டத்தில் வாழும் குழந்தைகளுக்கு இதர குழந்தைகளைப்போல் கல்வி பெறும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றதோ அன்றைக்குத்தான் சோஷலிசக் கொள்கைகளைப் பற்றிச் சிந்திக்க எமக்கு உரிமையுண்டு. பல தேசங்களில் அரசியல் சட்டங்களைப் பார்த்துள்ளோம. ஆறு மாதம் ஒருவர் ஒரு தேசத்தில் தொடர்ந்து வசித்து அவர் விரும்பிக் கொண்டால் அத்தேசத்துப் பிரஜையாகிவிடுகின்றார். நம் தேசத்திலே 200 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் முன்னேற்றத்துக்கு உழைத்த மக்களுக்கு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டு நிர்க்கதியற்ற நிலையிலுள்ளனர்.

இவ்விழாவில் கண்டி வட்டார வித்தியாதரிசி திரு பொ. சின்னத்துரை, மத்திய மாகாண தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன், பண்டிதை சி இராசலட்சுமி ஆகியோரும் பேசினர்.

---

## பெண்ணுக்கு ரூ. 100 அபராதம்

### கள்ளு வைத்திருந்தாராம்

தெல்லிப்பழை, ஞாயிறு

காங்கேசன்துறை தையிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னக்குஞ்சி என்னும் பெண்மணி உத்தரவில்லாமல் 36 போத்தல் கள்ளு வைத்திருந்ததாகக் காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் சி. கரஸ்கமவால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரியை 100 ரூபாய் அபராதம் செலுத்துமாறும், கைப்பற்றப்பட்ட கள்ளைக் கொட்டும்படியும் உத்தரவிட்டார்.

மயிலிட்டியைச்சேர்ந்த வல்லிநாகன் என்பவர் 3 போத்தல் கள்ளு வைத்திருந்த குற்றத்திற்கு மல்லாகம் நீதிபதி 20 ரூபாய் அபராதம் விதித்தார்.

# எதிரிகளுக்குப் பிணைசெலுத்தியவர் அதை வாபஸ் பெற்றார்

## பெண்கடத்து வழக்கில் சம்பவம்

தெல்லிப்பழை, ஞாயிறு

பண்டத்தரிப்பு அமெரிக்க மிஷன் பாடசாலை ஆசிரியை செல்வி அருந்தவம் புண்ணியமூர்த்தி என்பவரைக் கடத்திச் சென்றதாக அதே ஊரைச் சேர்ந்த பி. தங்கராசா என்பவர்மீதும் அவருக்கு உடந்தையாக இருந்ததாக பி. குமாரவேலு, வி. கந்தையா என்னும் லண்டன் கந்தையா என்பவர்கள்மீதும் குற்றஞ்சாட்டி சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்போது எதிரிகளுக்குப் பிணை செலுத்தியிருந்த நாகலிங்கம் அருளம்பலம் என்பவர் தாம் செலுத்தியிருந்த பிணையை ரத்துச் செய்து இவ்வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு வழக்கறிஞர் திரு. செல்லத்துரை மூலமாக நீதிபதியைக் கேட்டார். எதிரிகள் தரப்பில் ஆஜரான திரு ஆர். கண்ணுத்துரை சனிக்கிழமையாயிருப்பதினால் திங்கட்கிழமை பிணை செலுத்த அவகாசம் தரும்படி நீதிபதியிடம் கோரினார். நீதிபதி இக்கோரிக்கையை நிராகரித்து நாகலிங்கம் அருளம்பலம் செலுத்திய பிணையை ரத்துச் செய்து எதிரிகளை மீண்டும் தலா ஆயிரம் ரூபா பிணையிற் செல்லுமாறும் பிணை செலுத்தத் தவறினால் இம்மாதம் 14-ம் திகதிவரை ரிமாண்டில் இருக்குமாறும் உத்தரவிட்டார்.

செல்வி அருந்தவம், எதிரி தரப்பில் ஆஜரான திரு. எஸ். நடராசாவால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது கூறியதாவது: எங்கள் குடும்பமும் எதிரியின் குடும்பமும் கடந்த 12 வருடகாலமாகக் கதைப்பதோ வேறு தொடர்பு வைத்திருந்ததோ கிடையாது. இச்சமயம் திரு. நடராசா செல்வி அருந்தவத்திடம் ஒரு படத்தைக் காண்பித்து இப்படம் எதிரியும் உனதுசகோதரனும் சமீபத்தில் எடுத்துக் கொண்டதல்லவா? என்று கேட்டார். அப்போது வழக்காளி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் படத்தைக் கோர்ட்டில் காண்பிப்பது தவறு. படத்தில் தந்திரம் உண்டு. பொய்யாகவும் இருவர் படத்தை ஒன்றாக இணைக்கலாம். ஆனபடியால் கோர்ட்டார் அப்படத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கூறினார்.

நீதிபதி படத்தை கோர்ட்டில் காண்பிக்கக்கூடாது என்று தெரிவித்தார். தொடர்ந்தும் அருந்தவம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது "நான் பெற்றோரின் சொற் கேளாது வீட்டைவிட்டுப் போனதில்லை என்று கூறியபோது திரு. நடராசா ஒரு கடிதத்தை அருந்தவத்திடம் காட்டி நீ வீட்டைவிட்டுக் கிளம்பி, உனது உறவினரான நாகலிங்கம் அருளம்பலம் என்பவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறாயல்லவா? என்று கேட்டார். அப்போது செல்வி அருந்தவம் 'இது என்னுடைய எழுத்துப் போலவேயுள்ளது. ஆனால் இது எனது கடிதமல்ல என்றார். திரு. டி. கணேசலிங்கம் கோர்ட்டார் இக்கடிதம் சம்பந்தப்பட்ட வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது. கடிதம் சட்டப்படி நிரூபிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கடிதத்தை ஆதாரமாகக் கொள்ளலாம் என்று கூறினார்

நீதிபதி கடிதம் சம்பந்தமான கேள்விகளைக் கேட்கலாகாது என வழக்கறிஞருக்கு உத்தரவிட்டார். எதிர்தரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஆர். கண்ணுத்துரை செல்வி அருந்தவத்தை குறுக்கு விசாரணை செய்தபோது கூறியதாவது: சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நானும் எனது சகோதரியும் பாடசாலைக்கு வந்து கொண்டிருந்தோம். வழியில் சகோதரி பென்சிலை வீட்டில் விட்டுவிட்டு வந்ததாகக் கூறவே நான் பென்சிலை எடுத்துவர சகோதரியை அனுப்பிவிட்டு வந்து கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் இரு ஆசிரியைகளும் வந்து கொண்டிருந்தனர். வழியில் கார் ஒன்று நின்றது. அதற்குப் பக்கத்தில் மூன்றாம் எதிரியான லண்டன் கந்தையா நின்றார். காருக்குச் சமீபமாகச் சென்றதும்என்னை காரிலிருந்து இறங்கி ஒருவர் பிடித்தார். அப்போது அவர் முதலாம் எதிரி என்று தெரிந்தது. நான் கூக்குரலிட்டேன் வாயைப் பொத்திக் காரில் கொண்டு சென்றனர். காரில் வைத்துத் தன்னைத் திருமணம் செய்ய வற்புறுத்தினார். மாதகலில் வைத்து அவரது கோரிக்கைக்கு இணங்கி பொலிஸ் நிலையத்தில் வந்து அவரைப் பிடித்துக் கொடுத்தேன்.

நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 14-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

---

## அகில இலங்கைச் சுற்றுப்பிரயாணம்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பின் தென்பகுதியைச் சேர்ந்த காத்தான்குடி, மத்தியமகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் அறுபது மாணவர்களும், ஐந்து ஆசிரியர்களையும் கொண்ட கோஷ்டியொன்று, அகில இலங்கைச் சுற்றுப்பிரயாணமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றது.

இவர்கள் இம்மாதம் 12-ம் திகதி மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு பொலன்நறுவ, சிகிரியா, டம்புள்ள, அனுராதபுரம், சிலாபம், கொழும்பு, கண்டி, நுவரெலியா, ஹப்புத்தல, கதிர்காமம், அம்பாறை ஆகிய இடங்களைப் பார்வையிட்டு, 18-ம் திகதி மட்டக்களப்பைவந்தடைவர்.

---

## கோழி வளர்ப்போர் தொகை அதிகரிப்பு

மன்னார், வெள்ளி

மன்னார் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகளை நடத்துவோர் தொகை அதிகரித்துள்ளது. கடந்த சிலமாதங்களில் இதன் பலன்களை நன்கு அறிந்து வெற்றிகண்டதால் ஏராளமான மக்கள் மேலும் கோழி வளர்ப்பில் ஊக்கம் கொண்டுள்ளனர்.

---

## வாழ்வு எங்கே?

முள்ளியவளை, சனி

புதுக்குடியிருப்பு உதயசூரியன் நாடகமன்றத்தினரின் புதிய சமூக நாடகமாகிய 'வாழ்வு எங்கே?' என்ற நாடகம், அர்ச். சூசையப்பர் ஆலயத்தின் அருகிலுள்ள அரங்கில் அரங்கேற்றப்பட்டது.

# "கூட்டுறவு முறையில் குடிசைக் கைத்தொழில்கள்"

## இளைஞர் விவசாயிகள் கழக கூட்டத்தில் யோசனை

சாவகச்சேரி, ஞாயிறு

சரசாலை ஸ்ரீராஜாஜி இளைஞர் விவசாயிகள் கழகக்கூட்டம் சரசாலை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. கே. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்ப்பிரதேசத்தின் பொருளாதார நிலையைப் பெருக்க அரசாங்கம் பல தொழில்களையும், தொழிற்சாலைகளையும் ஆரம்பிக்கவேணடும். இவற்றை அரசாங்கம் ஆரம்பிக்க முன்வராவிடின் அரசியற்கட்சிகளாவது நமக்கு ஊக்கம் காட்டிக் கூட்டுறவு முறையில் இவைகளை ஆரம்பிக்க உதவி புரிய வேண்டும்.

அவர் மேலும் கூறியதாவது: "மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி தென்கிழக்கு ஆசியாவிலேயே உள்ள ஒரே ஒரு கூட்டுறவு ஆஸ்பத்திரி. வதிரி சப்பாத்துத் தொழிற்சாலை யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு கூட்டுறவுச் சப்பாத்துத் தொழிற்சாலையாகும். இவற்றை நோக்கும்போது சரசாலை வாசிகள் ஏன் கூட்டுறவு முறையில் குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிக்கக் கூடாது?

சரசாலையில் அரசாங்கத்துக்குரிய ஆயிரம் ஏக்கருக்குட்பட்ட நிலம் தரிசாகக் கிடக்கிறது. இதில் மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை, ஆட்டுப்பண்ணை ஆகியவற்றை ஏன் நடாத்தக்கூடாது!

அல்லாமலும் கூட்டுறவு முறையில் தும்புக் கைத்தொழில், நெசவுக் கைத்தொழில், பன்னக் கைத்தொழில்களையும் ஆரம்பித்து நமது பொருளாதாரத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க வாலிபர்கள் விழிப்புணர்ச்சியுடன் முன்வர வேண்டும்.

உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப் பெற்றனர்:-

போஷகர் திரு. எஸ். கைலாயபிள்ளை, தலைவர் திரு. கே. அருணாசலம், உபதலைவர் திரு. கே. கைலாயபிள்ளை. காரியதரிசி திரு. ஏ. சிவஞானம், உபகாரியதரிசி திரு. கே. சண்முகதாசன், தனாதிகாரி திரு. ரீ. நித்தியானந்தன்.

---

## உதவியாசிரியர்கள் மாற்றம்

முள்ளியவளை, சனி

பண்டாரவளை சென். ஜோசப்ஸ் கல்லூரி ஆசிரியர்கள் திருவாளர்கள் எஸ். கே. செல்வரத்தினம், என். கே. சண்முகநாதபிள்ளை, புசல்லாவை புனித திரித்துவக் கல்லூரி ஆசிரியர் திரு. பிரான்சிஸ் இராஜேந்திரம், பெல்மதுளை மத்தியமகா வித்தியாலய ஆசிரியர் திரு. ஏ. கே. மகாலிங்கம், வட்டுவாகல் அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். டி. குணரத்தினம் ஆகியோர் வித்தியானந்தக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

---

## அமெரிக்க திரைப்படம்

காங்கேசன்துறை, ஞாயிறு

பலாலி, சென்ற் செபஸ்தியன் சனசமூகநிலைய ஆதரவில் இம்மாதம் பத்தொன்பதாம் திகதி சனிக்கிழமை, அமெரிக்க ஸ்தாபனம் அமெரிக்க செய்திப் படம் ஒன்றினைக் காண்பிக்க ஏற்பாடுகள் செய்துவருகின்றது. பலாலியில் காண்பிக்கப்படும் செய்திப்பட வரிசையில் இது மூன்றாவது தடவையாகும்.

---

## கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டதாம்

### ரூ.1000 பிணையில் செல்ல அனுமதி

பருத்தித்துறை, வெள்ளி

சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி என்பவரது வீட்டை கலால் இலாகாவினர் திடீர் பரிசோதனை செய்தபோது ஒரு இருத்தலிலும் கூடிய நிறை உடைய கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டதாம். கலால் பரிசோதகர், ஏ. ஆர். இராசு சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பியைக் கைது செய்துநீதிபதி முன் ஆஜர் செய்தார். நீதிபதி அவரை 1000 ரூபாய் பிணையில் செல்லும்படி உத்தரவிட்டார்.

---

## கவர்னர்ஜெனரல் பிரதான சாரணர்

கொழும்பு, வெள்ளி

கவர்னர்ஜெனரல் வில்லியம் கோபல்லாவ இலங்கை சாரணர் இயக்கத்தின் போஷகராகவும் பிரதான சாரணராகவும் பதவியேற்றுள்ளார். தன்னுடைய பாடசாலை நாட்களில் சாரணராகவும் பின்னர் சாரண ஆசிரியராகவும் திரு. கோபல்லாவ கடமையாற்றியுள்ளார் கண்டிப்பகுதி சாரண இயக்கத்தின் தலைவராகக் கடமையாற்றி பல சேவைகளையும் இவர் செய்துள்ளார்.

# 'எந்த வழியை தமிழ்மக்கள் பின்பற்றுவது?'

திருக்கோணமலை, ஞாயிறு "இன்று தமிழ்பேசும் மக்கள் முன் பல பிரச்சினைகள் உள்ளன. மொழி, பொருளாதாரப் பிரச்சினை போன்றவை அவையுட் சில. பல்வேறுபட்ட பல வழிகளிலே நம்மை வழிநடத்திச்செல்லும் அரசியற் கட்சிகளால் எமது உள்ளங்கள் பிரிவுபட்டநிலையில் எதைச் சாதிப்பது என்று தவிக்கின்றது. ஆளுவோரிடம் அடிபணிந்து கொடுத்ததைப் பெறுவோம் என்றநிலையில் ஒரு கூட்டம். உயிரைத் திரணமாக மதித்து எமது பிறப்புரிமையைப் பெற வேண்டிய நிலையில் பெற்றுக் கொள்வோம் என்று மற்றொரு கூட்டம். இந்நிலையிலே நமது பொருளாதாரம் பலவீனமடைந்து நிற்கும் வேளையில், தும்பியின் நிறைவுக்கு வழிகாணமுடியாது நிற்கும் மக்களை எண்ணி நாம் நிதான புத்தியுடன் செயலாற்றவேண்டும்." என்று சாந்தினி லோகிதராசா அன்புவழிபுரம் சனசமூகநிலைய 2-வது ஆண்டுவிழாவில் பேசுகையிற் கூறினர். ஆசிரியர் திரு. க. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட திருமலை எம். பி. திரு. இராசவரோதயம் பேசுகையில் அன்புவழிபுர மக்கள் ஊரின் பெயருக்கிணங்க அன்பும் அறனும் பொருந்தியவர்களாகக் காணுவதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைவதாகக் கூறினர்.

திருமலை உதவிஉள்ளூராட்சி ஆணையாளர் திரு.சிரிவர்த்தன பேசுகையில் தன்னல் தமிழில் பேச இயலாததையிட்டு வருந்துவதாகவும் அடுத்த ஆண்டு விழாவில் கட்டாயமாகத் தமிழிற்பேசுவதாகவும் கூறியபொழுது மக்கள் கரகோஷம் செய்தனர். செல்வி செல்வமணிவடிவேலு, பண்டிதர் இ. வடிவேலு ஆகியோரும் பேசினர். கைப்பந்தாட்டத்திடல் ஒன்றை திருமலைப் பிரதிநிதி இறுதியில் திறந்துவைத்தார்.

## தம்பாட்டிக் கோஷ்டி வெற்றி

ஊர்காவற்றுறை, சனி

கரம்பன் கிழக்கு சனசமூக நிலைய கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், நாரந்தனைவடக்கு தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலையக்கைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நேற்று நடைபெற்ற சிநேகபூர்வமான கைப்பந்தாட்டத்தில் தம்பாட்டிக் கோஷ்டி முறையே 15-2, 15-7 புள்ளிகளைப்பெற்று வெற்றி பெற்றது. தம்பாட்டி காந்திஜீ சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில்நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பி. குமாரசாமி மத்தியட்சகராகக் கடமையாற்றினர்.

## சரவணையில் அமெரிக்க திரைப்படக்காட்சி

ஊர்காவற்றுறை, சனி

இலங்கை அமெரிக்க தகவல் பகுதியினர், விவசாய குடிசைக் கைத்தொழில் சம்பந்தப்பட்ட திரைப்படக் காட்சி ஒன்றை நேற்றிரவு சரவணை சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் காண்பித்தனர்.

## மின்சாரநிலையபோர்மன் இடமாற்றம்

காங்கேசன்துறை, ஞாயிறு

சுன்னாகம் மின்சார நிலையத்தில் போர்மனாகக் கடமையாற்றிய திரு. ஆர். வரதராஜன் இம்மாதம் பதினைந்தாம் திகதியிலிருந்து கொழும்பு மின்சார நிலையத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருக்கிறர்.

## வளலாய் சனசமூக நிலையம் கட்டுரை பேச்சுப்போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

அச்சுவேலி, வெள்ளி

அச்சுவேலி வளலாய் சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கட்டுரைப் பேச்சுபபோட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினர். இப்பரிசளிப்பு விழாவுக்கு திரு. செ. குணரத்தினம் தலைமை வகித்தார்.

பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

### கட்டுரைப்போட்டி

முதற்பிரிவு:- கி. நவரத்தினம், ச. சிவலிங்கம், நா. இராசதுரை.

இரண்டாம்பிரிவு:- சி. பரமலிங்கம், சி. பாலசுப்பிரமணியம், கி. மகாலிங்கம்.

மூன்றும்பிரிவு:- பொ. பரமேஸ்வரி, நா. செல்வநாயகம், இ. சுபத்திரை.

நாலாம்பிரிவு:- ந. திருநாவுக்கரசு, கி. தவமணிதேவி, மா. தவநாயகம்.

### பேச்சுப் போட்டி

முதற்பிரிவு:- நா. இராசதுரை, கி. நவரத்தினம், ச. சிவலிங்கம்,

இரண்டாம் பிரிவு:- கி. மகாலிங்கம், சி. பரமலிங்கம், மா. செல்லத்தம்பி.

## வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி அரசாங்கம் மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், வெள்ளி

இதுவரை தனித்து இயங்கிய வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரியை வருகிற 23-ம் தேதிமுதல் அரசாங்கம் மேற்கொள்கிறது. அரசாங்கக் கல்லூரியாக நடத்தப்படும்போது கல்லூரியில் முன்பு சேவைசெய்த ஆசிரியர்கள் மீண்டும் கடமையாற்றுவார்கள் எனத்தெரிகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

திங்கள் 14-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிகக நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரைஇசை, 8-00 கிளாரினெட்டும் புல்லாங்குழலும், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள். 5-45 திரை இசை 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 சரோஜினிதேவி பத்மநாதன்—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-20 தேர்ந்த இசை, 9-45 நாகேஸ்வரி பரமனந்தா—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. வி. சிவசிதம்பர ஐயர்—புல்லாங்குழல்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 இசைக்கோவை, 1-30 குரல் இசை, 1-50 வாத்திய இசை, 2-10 நாகலட்சுமி வேங்கடராமன்—பாட்டு.

மாலை விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 இலக்கிய ஏடு, 7-40 திரைப்பட இசை, 7-50 நமது தபால்பெட்டி, 8-00 டி. வி. சிவசிதம்பர ஐயர்—புல்லாங்குழல், 8-30 நாகலட்சுமி வேங்கடராமன்—பாட்டு, 9-15 வி. ரங்கநாதசாஸ்திரி—பேச்சு, 9-30 இசைமலர்.


## விளையாட்டுப் போட்டி

முள்ளியவளை, ஞாயிறு

வவனியா, மன்னர் மாவட்ட வித்தியாலயங்களின் உடற் பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள், இம் மாதம் 25, 26-ம் திகதிகளில் வவனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெறவிருக்கின்றன.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்ட்டேட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் ... விருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ... நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியாக விருக்க வேண்டும் ... மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில் ... இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடை... தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—... மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழு... உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்லடின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும். இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான்விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# அமெரிக்காவிலும் சிவாஜி நன்கொடை

## குழந்தைகளுக்கு ஒரு யானை பரிசாக வழங்குவார்

லாஸ்வெகாஸ்,நெவாடா,மே 13

கிராண்ட் கான்யான் என்னும் மாபெரும் மலை இடுக்குகளின் இயற்கை அழகைக் கண்டு களித்துவிட்டு நடிகர் திலகம் சிவாஜிகணேசன் திங்கட்கிழமை இங்கு வந்து சேர்ந்தார். சென்ற வாரம் நியூ மெக்ஸிகோ மாநிலத்திலுள்ள ஆல்புகர்க் என்னும் நகரில் அவர் இரண்டு நாள் தங்கினார். அங்குள்ள குழந்தைகளுக்கு அவர் ஒரு அரிய நன்கொடை வழங்கியுள்ளார்.

ஆல்புகர்க் நகரிலுள்ள மிருக காட்சிச்சாலைக்கு யானை ஒன்று வாங்குவதற்காக அங்குள்ள சிறுவர் சிறுமியர்கள் ஒரு நிதி திரட்டி கொண்டிருந்தார்கள். அதை அறிந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் யானையொன்றை தாம் நன்கொடையாக வழங்க விரும்புவதாக நகர அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். "அமெரிக்க மக்கள் இந்திய குழந்தைகளுக்கு வழங்கும் உதவியைப் பாராட்டும் சின்னமாக அது விளங்கும்" என்று அவர் கூறினார்.

ஆல்புகர்க் நகரில் அப்பாச்சி இனத்தைச் சேர்ந்த அமெரிக்க இந்தியர்களை அவர் கண்டு பேசினார். தமது வாழ்க்கையின் நெடுங்காலக் கனவு ஒன்று நிறைவேறி விட்டது என்று அவர்களைச் சந்தித்தது பற்றி அவர் தம் நண்பர்களிடம் தெரிவித்தார்.

யானை ஒன்றை நன்கொடை வழங்க சிவாஜி கணேசன் முன் வந்ததைப் பாராட்டி நகரின் துணை மேயர் டபிள்யூ. ஏ. அட்கின்ஸன் பேசுகையில் நகரிலுள்ள இரண்டு லட்சம் மக்களும் அவரது அன்புச் செயலை மிகவும் போற்றுவதாகத் தெரிவித்தார்.

### நட்பின் சின்னம்

இந்திய அமெரிக்க நட்புக்கு "ஒரு நிலையான சின்னமாக" யானை விளங்கும் என்று அட்கின்ஸன் கூறினார். சிவாஜி கணேசன் யானை வழங்குவதாக அறிவித்த போது, பூங்காக்கள், பொழுது போக்கு துறை ஆகியவற்றின் டைரக்டர் ராபர்ட் பர்கன், ஆல்புகாக் நகரிலுள்ள ரியோ கியோ கிராண் மிருக காட்சிசாலை டைரக்டர் ஜலோ பாக்லாயன் முதலியோரும் இருந்தனர்.

## அச்சுவேலி கொலை எத்தனவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

அச்சுவேலியைச் சேர்ந்த ஐயன் பொன்னன் என்பவர் அதேயூரைச் சேர்ந்த தனது சகோதரர்களான ஐயங்கன் பாலன் என்பவரை கொலை செய்ய எத்தனித்ததாக காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யு. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை இம்மாதம் 24-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## மாற்றலாகிச் செல்லும் ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

நெல்லியடி, ஞாயிறு

பருத்தித்துறை புதிய கலட்டி ஞே. க. பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர் இ. யோசேவ் யாழ்ப்பாணம் சென்ஞேக்ஸ் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்வதையிட்டு இப் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் ஓர் பிரியாவிடை உபசாரம் நடத்தினர்.

சிரேஷ்ட பிரிவு மாணவர்களால் திரு. இ. யோசேவ் ஆசிரியருக்கு பிரிவுபசாரப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன. திரு. க. நாகமுத்து, திரு. ஐ. நாகராசா வாழ்த்துப்பா பாடினர். தலைமை ஆசிரியர் உரையாற்றினர்.

## கல்லடி வேலாயுதசுவாமி ஆலய உற்சவம்

மட்டக்களப்பு, சனி

கல்லடி, ஸ்ரீ வேலாயுதசுவாமி உற்சவம் இம்மாதம் 12-ம் திகதி நடைபெற்ற கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து எட்டுத் தினங்களுக்கு விஷச ஆராதனைகளும் பூசையும் நடைபெற்று, 19-ம் திகதி வைகாசி பூரணையில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

## பாக்தாத் மகாநாடு காஷ்மீர்பற்றி விவாதிக்கும்

கராச்சி, மே13

ஈராக்தலைநகரான பாக்தாத்தில் இம்மாதம் 28, 29ந் திகதிகளில் முஸ்லிம் நாடுகளின் மகாநாடொன்று நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாட்டில் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகளின் 200 பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

ஈராக் பிரதமர் ஜெனரல் காசிம் ஆரம்பித்து வைக்கவிருக்கும் இந்தமகாநாட்டில் காஷ்மீர் பிரச்சினையும் விவாதிக்கப்படவிருக்கிறதாம். பாலஸ்தீனம், அல்ஜீரியா, மேற்கு இரியான் பிரச்சினைகள் பற்றி மகாநாடு ஆராயும் என்று அறிவிக்கப்படுகிறது.

## சூறுவளியால் வீடுகள் சேதம்

நெல்லியடி, ஞாயிறு

கட்வெட்டி மேற்கு கோணண்டி என்னுமிடத்தில் சின்னத்துரை, நல்லதம்பி, வீரகத்தி பொன்னுச்சி, முருகேசு மாணிக்கம் என்பவர்களுடைய வீடுகள், வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பலத்த மழையுடன் ஏற்பட்ட சூறுவளிக் காற்றுல் சேதமடைந்துள்ளன

## வழிகாட்டிகள் திரும்பினர்

உடுப்பிட்டி, சனி

அனுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கைப் பெண் வழிகாட்டிகள் மகாநாட்டிற் கலந்து புராதன இடங்கள் பலவற்றைப் பார்த்த உரும்பராய் இந்துக்கல்லூரிப் பெண் வழிகாட்டிகள் பாடசாலை திரும்பினர். திருமதி சாரதா பேராயிரவன் தலைமையில் மேற்படி வழிகாட்டிகள் சென்றனர்.

# மக்கள் சுகாதார வாரம் யாழ்ப்பாணத்தில் கொண்டாட பூர்வாங்க ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இவ்வாண்டு மக்கள் சுகாதார வாரமாகக் கொண்டாடப் படவிருக்கும் அகில இலங்கைச் சுகாதார வாரத்தை அடுத்த மாதம் 4ம் திகதி தொடக்கம் 10-ம் திகதிவரை கொண்டாடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு குழுக்களும் செய்துவருகின்றன.

இதற்கான குழுக்களையும் மற்றும் ஏற்பாடுகள் பற்றியும் ஆலோசிப்பதற்காக யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவஞான சுந்தரத்தினல் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டம் திரு. அல்வின்ஸ் தலைமையில் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் சுகாதாரவாரத்தில் ஈடுபட்டு அதிக சுகாதார சேவை செய்த சனசமூக நிலையத்திற்கு ஓர் கேடயம் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

விழா முதல்நாளன்று வட்டாரரீதியாக அஞ்சல் ஓட்டச் செய்தியொன்றைச் சேர்ப்பித்து, அதைத் தொடர்ந்து சுகாதார உதவி அதிபர் டாக்டர் இராஜசிங்கம் இந்த விழாவை ஆரம்பித்து வைப்பார். சைக்கிள் ஓட்டம், கதம்ப நிகழ்ச்சி, பொருட்காட்சி, முதலியனவும் இடம்பெறும்.

இதுசம்பந்தமாகப் பாடசாலைகளில் புதிய அம்சமொன்றைப் புகுத்தி பரிசளிக்கும் திட்டமொன்றையும் அந்த வாரத்தில் இக்குழு வெளியிடும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்வேறு எழுத்தாளர்களையும் கொண்ட சுகாதாரப் பிரசாரக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது.

## போக்குவரத்து கமிஷனர் மகாநாடு

திருவனந்தபுரம், மே 13

தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய ராஜ்யங்களின் போக்குவரத்துக் கமிஷனர்களின் இரண்டுநாள் மகாநாடு திருவனந்தபுரத்தில் நடந்து முடிவடைந்தது.

## 7 அரசியல் கட்சிகள்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்துவிட்டது. யு. என். பி. அபேட்சகர் திரு. அசோகா மகாதிலுவெவா அனுராதபுரத் தொகுதியில் பல இடங்களிலும் பிரசாரக் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனது அபேட்சகர்பற்றி இன்னும் இறுதி முடிவு செய்யவில்லை. இம்மாதம் 15ந் திகதி அபேட்சகர் தெரிவு நடைபெறுமெனத் தெரிகிறது.

## கடந்த கால...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் ராஜேந்திரபிரசாத்துக்கு 'பாரதரத்னம்' என்ற விருதுக்குரிய பதக்கத்தை வழங்கினர்.

'பாரதரத்னம்' என்ற விருதைப் பெற்ற டாக்டர் ராஜேந்திரபிரசாத் நன்றி தெரிவித்துப் பேசுகையில் "ஒருதத்துவஞானி இந்தியாவின் ராஷ்டிரபதியாகப் பதவியேற்றுள்ளது பெருமைக்குரியது" என்று கூறினர்.

இதன்பின் உபராஷ்டிரபதியாக டாக்டர் ஸாகீர்ஹுசெய்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மாலையில் 6 குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டில் டாக்டர் ராதாகிருஷ்ணனும் டாக்டர் ராஜேந்திரபிரசாதும் புதுடில்லி ரயில் நிலயத்திற்கு பவனியாகச் சென்றனர். ரயில் நிலயத்தில் முப்படைகளின் அணிவகுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் ராஜேந்திர பிரசாத் பாட்னுவுக்கு விசேஷ ரெயிலில் புறப்பட்டார்.

புதிய ஜனுதிபதியாகப் பதவி யேற்றுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு உலகின் பல பகுதிகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. சோவியத் யூனியனிலிருந்து சோவியத் பிரதமர் குருஷ்சேவ் ஜனுதிபதிக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியுள்ளார். இலங்கை கவர்னர் ஜனரல் திரு வில்லியம்கோபல்லவாவும் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..........

கல்லூரி ..........

எனது பெயர் ..........

விலாசம் ..........

*இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம்)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த
இரத்தினபுரி இளவரசி
டைரக்ஷன்: ராமண்ணு

5வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 10 திரைகளில்
சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி,
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி
நடித்த
அனர்கலி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.